கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி

மாதப் பத்திரிகை விலை 4 அணா

தறி 3 | கோவை, 15—3—1952. | பாவு 5

29 MAY 1955
MADRAS

சந்தா விகிதம்

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டும் ஏஜண்டுகளே தேவை.

"கைத்தறி" காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.

தென்காசி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் ரேடியோ ஒலிபெருக்கி வைக்கப்பட்ட விழாவையொட்டி எடுக்கப்பட்ட படம். —விவரம் அடுத்த பக்கம்

தென்காசி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சி.

தென்காசி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் தொடங்கி சுமார் 14 ஆண்டுகள் ஆகின்றன. அதனுடைய வளர்ச்சி பிரமிக்கத் தக்கது; வரவேற்கவேண்டியது. அதன் தலைவர் ஜனாப் இ. ப. மு. முகமது மக்தூம்சாகிப் அவர்களுடையவும் உபதலைவர் திரு. அ. வையாபுரி முதலியார் அவர்களுடையவும் தன்னலமற்ற இடைவிடா நன் முயற்சியும் சேவையுமே தான்கீழ்க்காணும் வளர்ச்சிக்குக் காரணங்களாகும்.

இந்த கூட்டுறவு சங்கத்தின் 13-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை (1950—'51 வருடத்தியது) நம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் 203 தறிகள் வேலை செய்கின்றன. 148 நெசவாள அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். மொத்தம் பங்கு மூலதனம் ரூ. 14,120 எனக் காண உள்ளது.

ரூ. 14,120-ஐ பங்கு மூலதனமாகப் பெற்றுள்ள இந்த சங்கம், பிரஸ்தாப 1950—'51-ம் ஆண்டில் எல்லாவித செலவினங்களும் போக நிகரலாபமாக ரூ. 44,134 ஐ அடைந்திருக்கிறது.

பிரஸ்தாப ஆண்டில் நெசவாளர்களுக்கு நெசவு கூலியாக சங்கம் ரூ. 72,023 கொடுத்திருக்கிறது. இக்கூலியின்மீது ரூபாய்க்கு 0-2-5 வீதம் போனஸ் நெசவாளர்களுக்கு வழங்க சங்கப் பொதுச்சபை தனது 11—1—'52 தேதிய கூட்டத்தில் சம்மதம் தெரிவித்துத்தீர்மானம்நிறைவேற்றியிருக்கிறது. இன்றுசங்கத்தின் க்ஷேமநிதி ரூ. 40,325 ஆகும்.

தனது சங்க அங்கத்தினர்களுக்கு மாத்திரமின்றி, சங்க காரியாலயத்தைச் சுற்றியுள்ள மக்களுக்கும் உலகப் பொது அறிவு பெற பிரஸ்தாப ஆண்டில் சங்கம் தனது பொதுநலநிதியிலிருந்து ஒரு ரேடியோ செட்டும், ஒலி பெருக்கியும் வாங்கிப் பொருத்தியிருக்கிறது.

இந்த வைபவத்தையொட்டி எடுக்கப்பட்ட புகைப் படம் இம்மாத "கைத்தறி" இதழின்முகப்பை அலங்கரிக்கிறது. வைபவத்திற்கு திரு. மேடை தளவாய் டி, குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தும், கூட்டுறவு ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் திரு. கே. சுப்ரமண்யம் நாயுடு அவர்கள் துவக்கிவைத்தும்விழாவைச்சிறப்பித்திருக்கிறார்கள். அவர்கள் மாலையுடன் படத்தின் மத்தியில் நிற்பதைப் பார்க்கலாம்.

தவிர. சங்கத்திற்கென தனியாகச் சொந்தக் கட்டிடம்ஒன்று வாங்கப்பட்டிருக்கிறது. கடந்த 12 ஆண்டுகளைக் காட்டிலும் 13-வது ஆண்டுதான் சங்கம் நல்ல லாபத்தைப் பெற்றிருக்கிறது.

சங்கத்தின் உற்பத்தியான ஜவுளி ரகங்கள், நல்ல தரமுள்ளதாக இருப்பதால் மென்மேலும் அது வளர்ச்சி பெற்று, குறைந்த மெம்பர்களாகஇருந்தாலும் நல்ல லாபகரமாகவும், திறமையாகவும் ஒரு இயக்கத்தை நடத்த முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

போற்றத்தக்க சங்க வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்த தலைவர், சங்கசிப்பந்திகள், நெசவாள மெம்பர்கள் ஆகிய அனைவரையுமே நாம்போற்றுகிறோம். அவர்கள் மென்மேலும் முன்னிலும் பன்மடங்கு ஊக்கத்தோடு சங்க வளர்ச்சிக்குப் பாடுபடுவதோடு, வெகு விரைவில் தனது தறிக்கார அங்கத்தினர்களுக்கு காலனியேற்படுத்திக் கொடுக்கும் ஒரு நற்செய்தியை நாட்டிற்கு அளிக்க முன்வர வேண்டுமென்றும்நாம் விழைகின்றோம்.

ராஜ்யத்திலுள்ள எல்லா கூட்டுறவு நெசவாளர் ஸ்தாபனங்களும் இதுபோன்ற நடைமுறைகளைப் பின்பற்றி ஏழைக் கைத்தறியாளர்களுக்குப் புது வாழ்வு பூக்க உதவவேண்டுமென்று நாம் கோருகிறோம்.

சைதாப்பேட்டை நெசவாளர் பொதுக்கூட்டம்

தோழர் ஜீவாவின் இடிமுழக்கம்.

சென்னையைச் சேர்ந்த சைதாப்பேட்டை நெசவாளர் பொதுக் கூட்டம் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 20—2—52-ந் தேதியன்று தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனக் கிளைத் துவக்கத்தையொட்டி நடைபெற்றது.

மேற்படி சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் திரு. கே. எஸ். பார்த்தசாரதி, திரு. எம். கன்னியப்பன், மலேயா சாம்பசிவம், தோழர் ஜீவானந்தம் எம். எல். ஏ. ஆகியோர் பேசினர்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக நூல் கண்ட்ரோல் விலையில் கிடைக்கவும், கடந்தகாலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் பட்டுள்ள அவல நிலையிலிருந்து நெசவாளர்களை மீட்கவும் ஐக்கிய ஜனநாயக முன்னணி சர்க்கார் ஏற்பட்டுத்தீரவேண்டும் என்று தோழர் ஜீவா தெரிவித்தார்.

1947-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட நூல் விலைக்கே இன்றைய நூல் விலைகளைக் குறைத்துத் திருத்தியமைக்க வேண்டுமென்றும், மாகாணத் தேவையான 30000 பேல் நூல் கிடைக்கவேண்டுமென்றும், வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணி அனுப்ப எவ்விதத் தடையுமிருக்கக்கூடாதெென சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..

புதிய மந்திரி சபைக்கு

(2)

காங்கிரஸ் அல்லாத சட்டசபை அங்கத்தினர்களின் மகாநாட்டைத் தொடர்ந்து சுயேச்சையாளர்களின் தனிக்கூட்டம் ஒன்றும் சென்னையிலேயே நடைபெற்றிருக்கிறது. அந்தக் கூட்டத்தில கலந்துகொண்டவர்கள்கூட, தேர்தல் காலத்தில் அவரவர்கள் தொகுதிகளில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எந்த அளவிற்கு நிறைவேற்றுவதற்குத் தாங்கள் தயாராகிக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

அதற்கு பதில் காங்கிரஸ் அல்லாத சர்க்கார் அமைக்கப்பட்டால், அதில் தங்கள் சொந்த நலன் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் கலந்துகொள்வதைப் பற்றித்தான் அவர்கள் சிந்தித்துள்ளார்கள். சுயேச்சையாளர்கள், எவருடன் கூட்டுசேர்ந்து சர்க்கார் அமைக்கவேண்டுமென்றுயோசனை செய்வதைக் கண்டிக்கவோ, அல்லது அவர்கள் இன்ன கட்சியுடன் தான் சேரவேண்டுமென்று யோசனை சொல்லவோ 'கைத்தறி' தயாராக இல்லையென்றாலும், அவர்கள் யாருடன் கூட்டு சேர்ந்து சர்க்கார் அமைத்தால் தங்களின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியும் என்பதைப்பற்றி யாவது அவர்கள் தங்கள் கூட்டத்தில் யோசனை செய்திருக்கிறார்களாவெனில் அதுதானில்லை.

சோஷியலிஸ்ட் கட்சியைப்பொருத்தமட்டில் அவர்களின் முடிவு வழக்கம்போலவதானிருந்தது எனலாம். மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் சென்னை ராஜ்ய சட்டசபையில் அவர்கள் 13 பேர்களாக இருந்தாலும் தங்களுடைய பங்கு என்ன என்பது பற்றி ஒரே மவுனம் சாதித்திருக்கிறார்கள். அதற்குப்பதில் கம்யூனிஸ்ட் கட்சிமீது பெரிய வசை புராணம் ஒன்றைத் தயாரித்துப் படித்துவிட்டு—காங்கிரசையும் கண்டித்துவிட்டு, தேச பக்தியே தங்கள் கட்சிக்குத்தான் வாரிசு என எடுத்துக்காட்டி ஒரு நீண்ட தீர்மானத்தைமட்டும் நிறைவேற்றினார்களேதவிர நிர்மாணமாகவதாவது ஒருபக்கம் சேர்ந்து அதன் மூலம் தங்களின்தேர்தல்வாககுறுதியை நிறைவேற்ற அவர்கள் முன்வரவில்லை. அதற்குப்பதில் பொறுப்பிலிருந்து தப்பி ஓடியிருக்கிறார்கள்.

தொடர்ந்து சென்னையிலே வெற்றி பெற்ற காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள், தோற்றுவிட்டவர்கள், மாகாண காங்கிரசின் முச்யஸ்தர்கள், தலைவர்கள் ஆகியோரின் கூட்டு மகாநாடும் நடைபெற்றிருச்கிறது.

எம். கே. சாமி.

அந்த மகாநாட்டில்கூட, மாகாண மக்களின எதிர்கால வாழ்வைப்பற்றியோ, நாட்டை எதிர்நோக்கியுள்ள பல்வேறு சிக்கலான பிரச்னைகள் பற்றியோ பரிசீலித்தார்கள் என்று சொல்ல முடியாது.

தேர்தலில் பெரும்பாலான ஸ்தானங்களுக்குப்போட்டியிட்டு, மிகக் குறைவான—போதுமான மெஜாரிட்டியில்லாத அளவிற்கே ஸ்தானங்களைப் பெறவேண்டிய நிலை தங்கள் கட்சிக்கு என் ஏற்பட்டது என்பதைததான் அம் மகாநாடு பரிசீலித்திருக்கிறது.

மேலும் சொல்வதெனில் தங்கள் கட்சிக்கு ஏற்பட்ட பிரம்மாண்டமான தோல்விக்குக் காரணம் தலைமைதான் என்ற முடிவுக்கு அம்மகாநாடு வந்திருக்கிறதே தவிர—மக்களோடு போதுமான அளவு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளாததுதான் தோல்வியில் போய் முடியவேண்டியேற்பட்டது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களே தவிர தோல்விக்கு உண்மையான காரணம் என்ன என்பதைக்கூட அம் மகாநாடு பார்த்ததாகத் தெரியவில்லை.

மக்களின் ஜீவாதாரமான பிரச்னைகளைக் கடந்த 4 ஆண்டுகளாக புறக்கணித்துநின்றிருந்ததை மகாநாட்டைக் கூட்டியவர்கள்—எதிர்பாராத தோல்வியைச் சன்மானமாக மக்களிடமிருந்துபெற்றவர்கள் — காங்கிரஸ்காரர்கள் பாத்ததாக அம் மகாநாட்டுச் செய்திகளிலிருந்துதெரியவில்லை.

உதாரணத்திற்கு இந்தராஜ்ய கைத்தறி நெசவாளர்களின் பிரச்னையை மட்டும் எடுத்துக்கொண்டாலே போதும். நூல் பிரச்னையைச் சமாளிக்க அவர்கள் மேற்கொண்ட நடைமுறைகள் யாவுமே முன்னிலும் பன்மடங்கு அதன் நெருக்கடியை ஆழமாக்கியதே தவிர, காயத்தை ஆற்றித் தழும்பையுண்டாக்கவில்லையென்பது தெளிவாகத் தெரியும். அதைப்பற்றி நாம் திட்டவட்டமாக ஒவ்வொரு பிரச்னைகளிலும் அவ்வப்போது எப்படிப்பட்ட நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு காரியசாத்யமான யோசனைகளை 'கைத்தறி' யின்மூலமாக எடுத்துக்காட்டியே வந்திருக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நேரிடையாகவும், கடிதப் போக்குவரத்துக்கள் நடத்தியும், மகஜர்கள் கொடுத்தும் பிரச்னைகளைத் தீர்க்க மார்க்கங்களை எடுத்துக்கூறி வந்திருக்கிறோம்.

தலைமை மாறினால் நிலைமை மாறிவிடும் என்று எண்ணுவதை—அதையே முடிவாக நிறைவேற்ற முற்பட்டதை நம்மால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. யதார்த்தமான பிரச்னைகள் கண்முன் நிற்க, அவைகளைப்பார்த்துப் பரிசீலித்துப் பரிகாரம் காணுவதின் மூலம்தான் தங்களின் அரசியல் எதிர்காலம் — பொதுவாழ்க்கை அடங்கியிருக்கிறது என்கின்ற பேருண்மையைப் பார்க்காமலே கூடிக் கலைந்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

இப்போதைய நிலைதான் என்ன? மந்திரி சபை அமைப்பதில் நான் முந்தி நீ முந்தி யென ஒவ்வொரு கட்சிக்காரர்களும் போட்டியிட்டுக்கொண்டு — அதற்கான வலை வீசும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவரவர்கள் கட்சிக்கு ஆளும் பலத்தைத் தேடிக்கொள்ள, தேர்தல் கால வாக்குறுதிகளைக் குறைத்துக்கொள்ளுகிறார்களாம்! வேடிக்கையாக இருக்கிறது இதை நினைக்க. பதவி ஆசை—அதிகார பீடத்தை அலங்கரிக்கவேண்டும் என்ற எண்ணம்—ஆட்சிக்கு வரு முன்பே தாங்கள் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை மறக்கவோ—அல்லது குறைத்துக்கொள்ளவோ செய்திருக்கிறதெனில்—உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆகியிருக்கிறதெனில் ஆட்சிக்கு வந்தபின் அதுவும் தேய்ந்து என்னவெல்லாம் ஆகுமோ நாம் அறியோம்.

கொள்கை, லட்சியம், தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம்கூட, அதிகாரம்-பதவியென்கிறபோது அடியோடு புறக்கணிக்கப்பட்டு, மக்களின் பொதுவான நலனைப் பார்க்க மறுப்பவர்களோடு—சொந்த நலனே பிரதானம்; அதற்கு ஆபத்து வராமல் எப்பாடு பட்டாவது தடுக்கவேண்டுமென்று எண்ணுபவர்களோடு—அவர்களின் நலன்களுக்கேற்ப குறைத்துக்கொள்ளப்படுகிற ஒரு விந்தையை—மக்களுக்கு இழைக்கும் துரோகத்தனத்தை நாம் இங்குதான் பார்க்க முடிகிறது.

இந்தப் பாதையில் ராஜ்யத்திலுள்ள எல்லா கட்சிகளுமேதான் அடியெடுத்து வைத்திருக்கின்றன. இதில் எவையுமே விதிவிலக்காக இல்லை. இதை நாம் இங்கு குறிப்பிடுவதன் நோக்கமே அவர்களின் முயற்சிகளை விமர்சித்து திருத்த வேண்டுமென்கிற எண்ணத்தால் அல்ல.

அதற்குப்பதில், இந்த முயற்சியில் ராஜ்ய கைத்தறி நெசவாளர்கள் எப்படி ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தவேதான் நாம் இங்கு இவைகளைக்குறிப்பிட்டோம். நம்மைப் பொருத்தவரையில் யார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதானாலும் அவர்கள் தங்களின் தேர்தல் காலவாக்குறுதிகளை பூரணமாக கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நிறைவேற்றியாகவேண்டுமென்பதுதான்.

அதை எப்படி நிறைவேற்ற வேண்டும்என்பதைஎடுத்துக்காட்டுவதற்கும், அந்த அடிப்படையில் ராஜ்யத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களனைவரும் தங்கள் குரலை உயர்த்துவதற்காகவுமே தான் நாம் மேற்கண்ட தலைப்பில் இக் கட்டுரையையே தொடங்கியுள்ளோம்.

ஃ ஃ ஃ

உணவு உற்பத்திப் பெருக்கம் பற்றிகூறுகிற எல்லோருமே, கட்டிக்கொண்டிருக்கும் அணைக்கட்டுகளின் வேலைகள் முடிவதையே சுட்டிக் காட்டுகின்றனர். அத்தோடு நில உறவு முறைகளில் செய்ய உத்தேசித்துள்ள மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் வெகு விளக்கமாக எடுத்துக்காட்டுகின்றனர். அவை பூரணமாக நிறைவேற்றப்பட்டாலே, இந்த ராஜ்யத்தில் உணவு உற்பத்தியோடு சேர்ந்து பருத்தி சாகுபடியும் அதிகரிக்கும் என திட்டமாக நாம் நம்புகிறோம்.

எனவே, இப் பிரச்னையைப் பொருத்த வரை நாம் எவருடனும் அபிப்ராய மாறுபாடு கொள்வதேயில்லை. அதற்குப்பதில் மனப்பூர்வமாகஅச்சீர்திருத்தங்களை ஆதரிக்கிறோம்; வரவேற்கிறோம்.

இன்றுள்ள நிலையில் நம் நாடு உணவில் மட்டுமல்ல, பருத்தியிலும் சுயதேவைப் பூர்த்தியை யெய்தமுடியாத நிலைமையிலேயே இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அமெரிக்கா, பாகிஸ்தான், எகிப்து, சூடான் போன்ற வெளி நாட்டுப் பருத்தியை ஓரளவு எதிர்பார்த்தே நம் நாட்டு நூல் உற்பத்தி நடைபெற்றுவருகிறது.

நரிக்கல்பட்டியில் நெசவுத் தொழிலாளர் சங்கம் ஆரம்பம்

திரு. ஆர். குப்புசாமி செட்டியார் தலைமையில் 25—2—52-ந் தேதியன்று நெசவாளர் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. அதுசமயம் திரு. எஸ். விஸ்வநாதன் கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தின் அவசியம் குறித்து விளக்கமாகப் பேசினார்.

பின்பு எஸ். கோபால் செட்டியாரைத் தலைவராகவும், எம். குருசாமியை காரியதரிசியாகவும், மற்றும் ஐந்துபேர்களைக்கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தை தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தோடு இணைப்பது என்றும், சங்கத்தை ரிஜிஸ்ட்டர் செய்வதுஎன்றும்தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பருத்தித் தேவை முழுவதையும் நாம் நம் நாட்டு நிலங்களில் விளைவித்துக்கொள்ளக்கூடிய நிலையை அடையவேண்டும். இது ஒரு அகில இந்திய பிரச்னையே யென்றாலும், ராஜ்ய சர்க்கார் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கமுடியாது. குறைந்த நெம்பர் நூல் நூற்கத் தேவையான பஞ்சு சென்ற ஆண்டு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதெனவும், அப்பருத்தியை நம் ராஜ்ய நூல் நூற்பு ஆலைகளுக்குக் கொடுக்கப்படாமல் பம்பாய், அஹமதாபாத் போன்ற வட இந்தியப் பஞ்சாலைகளுக்கே கொடுக்கப்பட்டதென்றும் அறிகிறோம். அதற்காக சொல்லப்பட்ட காரணங்கள் என்னவோ விசித்திரமாகத்தான் இருந்தது.

இதன் விளைவாக தெ. இ. மில் முதலாளிகள் மத்தியில் ஏற்பட்டிருந்த சலசலப்பை சமனப்படுத்துவதற்கென்றுதான் பஞ்சு வர்த்தகத்தில் ராஜ்ய நாமினி முறை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள் எனச் சொல்லப்படுகிறது. இந்த ராஜ்ய நாமினி முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்து வெற்றி கண்டதால் அம்முறை அமுலாக்கிச் சிறிது நாளிலேயே செத்தும் விட்டது. இன்று வேறோர் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றாலும், அது பருத்தி விவசாயிகளை ஊக்குவிப்பதாக இல்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

பருத்தித் தேவையை அடைய!

நாட்டில் உள்ள மொத்தம் 417 பஞ்சாலைகளின் பஞ்சுத் தேவை 40 லட்சம் பேல்கள் என மதிப்பிடப்படுகிறது. இந்தத் தேவையை நம் நாட்டுப் பருத்தி விளைச்சல் மூலம் பூர்த்திசெய்ய இன்றுவரை முடியவில்லை. இங்கு விளையும் பருத்தி, கொட்டை நீக்கிக் கிடைக்கும்போது 28 லட்சம் பேல்கள் பஞ்சுதான் கிடைக்கிறது. பாக்கி 12 லட்சம் பேல்கள் நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம் எனச் சொல்லப்படுகிறது.

இப்புள்ளி விவரத்தைக் கூறுகிறவர்கள்—இந்நாட்டின் பருத்திப் பற்றாக்குறை பற்றியே சொல்லுகிறார்களே தவிர, அதே காலத்தில் போதுமான விளைச்சல் இல்லாமலிருந்தும் பெங்கால் தேசி ரகப்பருத்தியை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதை மட்டும் இவர்கள் வெளியில் சொல்லுவதேயில்லை.

நம் ராஜ்யத்தைப் பொருத்தளவில் இங்குள்ள பஞ்சாலைகளின் தேவைக்கான பருத்தி இங்கேயே விளைகிறது என அறியக்கிடக்கிறது. ஆனால் அவைகளைப் பூராவும் நம் ராஜ்ய மில்களே பெற்றுக் கொள்ளுவதற்கான வாய்ப்பை அ. இ. பஞ்சு கண்ட்ரோல் கமிட்டி அனுமதிப்பதில்லை. காரணம்; பஞ்சு கண்ட்ரோல் கமிட்டியானது பஞ்சு மார்க்கெட்டைக் கட்டுப்படுத்தவும், வினியோகத்தில் அதன் ஆலோசனைகள் அமுலாக்கப்படவும் அது அதிகாரம் வாய்ந்ததாக இருப்பதால் தான்.

எனவே, ராஜ்யத் தேவையான நூலை வைத்துக் கொண்டுதான் மீதியை நாங்கள் வெளி மாகாணங்களுக்கோ, அல்லது வெளிநாடுகளின் ஏற்றுமதிக்கோ அநுமதிப்போமெனக் கூறும் புதிய சட்டசபையின் பல்வேறு கட்சினரும், அவர்கள் சொல்லும் இந்த திட்டம் நடைமுறையில் சாத்தியமானதாக்க பஞ்சு விஷயத்திலும் அதே திட்டத்தைத்தான் மேற்கொண்டாக வேண்டுமென்பதை நாம் அவர்களுக்கு எடுத்துக்காட்டுகிறோம். நம் ராஜ்யத்தில் விளையும் பஞ்சை நாம் வெளியே அனுப்பிவிட்டு, அ. இ. பருத்தி கண்ட்ரோல் கமிட்டி அலாட்மெண்ட் போடும் குப்பைப் பருத்தியை நாம் பெற்றுக்கொள்வதை கிரியாம்சையில் மறுத்துவிட வேண்டும். சில உயர்ந்த நெம்பர் நூல் நூற்கத் தேவையான எகிப்து பஞ்சு மட்டும் இந்த ராஜ்ய சர்க்காரே நேரிடையாகத் தேவையானதைப் பெற்று ராஜ்யப் பஞ்சாலைகளுக்கு வினியோகிக்க வேண்டும்.

(11-ம் பக்கம் பார்க்க.)

பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு வரவேற்பு.

குளித்தலைத் தாலூக்கா தன்னேர்பள்ளி கைத்தறி நெசவாளர்களின் பொதுக்கூட்டமொன்று 22—2—52-ந் தேதியன்று ஈரோடு தொகுதி மக்கள் சபை அங்கத்தினர் திரு கே. பெரியசாமிக் கவுண்டருக்கு வரவேற்பளித்து கவுரவிப்பதற்காக நடைபெற்றது.

நெசவாளர்கள் வாசித்தளித்த வரவேற்புப் பத்திரத்தில் இன்று நிலவியுள்ள நூல் நெருக்கடியைப் போக்கி, நெசவாளர்களின் நல்வாழ்வுக்கு வழிவகை செய்யவேண்டுமென்றும், கைத்தறி ஜவுளிகள் விற்பனைக்கான வெளிநாட்டு வர்த்தகத்தைப்பெருக்க மத்தியசர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தன.

வரவேற்புக்குப் பதில் கூறிய திரு. பெரியசாமிக் கவுண்டர், நெசவாளர்களின் குறைகளைப் போக்கத்தான் இடைவிடாது பாடுபடுவதாகவும், மக்கள் சபைமுன், பத்திரத்தில் கூறப்பட்டுள்ளவைகளை எடுத்துச் சொல்லிப் பரிகாரம் தேடுவதாகவும் கூறினர்.

பல்வேறு கஷ்டங்களுக்கிடையிலும் இத்தொகுதி கைத்தறி நெசவாளர்கள் காங்கிரசை ஆதரித்து வெற்றிக்குப் பாடுபட்டதற்காக குளித்தலை திரு. கிருஷ்ண ஐயர், பெருகுமளை திரு. பெரியசாமி ஆகிய இருவரும் நன்றி தெரிவித்தனர்.

வழி பிறக்க வேண்டும்.

[கடிதம்.]

ஈரோடு, தாராபுரம் தாலூக்காக்களைச் சேர்ந்த கந்தசாமிபாளையம், சின்னமுத்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நெசவாளர்கள் — ஆண்கள், பெண்கள் உள்பட பலர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதத்தை நாம் இங்கே பிரசுரித்துள்ளோம். இக்கடிதம் பிரசுரிக்கப்படுவதின் நோக்கம்; எவரையும் தனிப்பட குறைகாண வேண்டுமென்பதற்காகவோ, அல்லது ஒரு இலாகா அதிகாரியின் நிர்வாகத்தில் தலையிட வேண்டுமென்பதற்காகவோ அல்ல. அதற்குப் பதில் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும். குறைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காகவேதான் நாம் இக் கடிதத்தை அப்படியே இங்கு பிரசுரித்துள்ளோம். கூட்டுறவு இலாகாவின் தலைமை அதிகாரிகளின் —சர்க்காரின் கண் திறக்கட்டும். இப்படிப்பட்ட கொடுமைகள் மாளட்டும். ஏழைக் கைத்தறியாளரின் வாழ்வு வளமாகட்டும். வீணான—விரும்பத்தகாத அதிகார ஜபர்தஸ்துகள் ஒழியட்டும் என்பதற்காகவேதான் இக்கடிதம் பிரசுரிக்கப்படுகிறது. மேற்படி கிராம ஏழை நெசவாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கூட்டுறவு இயக்கத்தின் கீழ் இல்லாத கைத்தறி நெசவுத் தொழிலாளர் ஸ்தாபனங்களும் மாகாண ரிஜிஸ்ட்டாருக்கும், கூட்டுறவு அமைச்சருக்கும் கடிதங்கள், தந்திகள், தீர்மானங்கள் அனுப்பிவைத்து, அவர்களின் முயற்சி வெற்றிபெற உதவுமாறு நாம் எல்லா நெசவாளர்களையும், சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம். — ஆசிரியர்.

அன்புள்ள ஐயா,

"அடியிற்கையொப்பமிட்டுள்ள ஏழை நெசவாளர்கள், தற்போது ஈரோடு வட்டாரத்திலுள்ள கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்ட்ரார் நெசவாளர்களுக்கு இழைத்துவரும் துன்பங்களை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். தாங்கள் தயவு செய்து தங்கள் பத்திரிகையில் தக்கமுறையில் பிரசுரித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

சென்ற 1951-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஈரோடு தாலூக்காவைச் சேர்ந்த **கந்தசாமி பாளையம்,** தாராபுரம் தாலூக்காவைச் சேர்ந்த **சின்னமுத்தூர்** ஆகிய இரண்டு கிராமங்களிலும் தனித்தனியாக இரண்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், மேற்படி வட்டாரத்திலுள்ள சுமார் 700 நெசவாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்திக் கொடுக்கும்படி விண்ணப்பங்கள் ஈரோடு வட்டார டிப்டி ரிஜிஸ்ட்ரார் அவர்களிடம் சமர்ப்பித்தோம்.

அதுசமயம் ஈரோடு வட்டாரத்திலிருந்த டிப்டி ரிஜிஸ்ட்டிரார், எங்கள் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து டிபார்ட்மெண்டில் நடைபெறவேண்டிய சாங்கோபாங்கமான விசாரணைகள் முடிந்து இன்ஸ்பெக்டர் மூலம் Organisation செய்யப்பட்டு டிபாசிட் தொகை செலுத்தும்படி உத்திரவிட்டார். அதன்படியே ஏழை நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் கால் வயிராவது குடிக்கலாம் என்ற ஆர்வத்தால் ஒவ்வொரு கிராமத்திலும் ரூ. 5000/- வசூலித்து முன்பு இருந்த டிப்டி ரிஜிஸ்ட்டிரார் அவர்களின் உத்திரவுப்படி கோவை மத்திய கூட்டுறவு பாங்கியில் 7—6—51ல் டிபாசிட்டாக செலுத்தப்பட்டது. சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினிடமிருந்தும், மத்திய கூட்டுறவு பாங்கியினிடமிருந்தும் அங்கீகாரம் கிடைத்தவுடன் மேற்படி இரண்டு கிராமங்களிலும் சங்கங்கள் அவசியம் ரிஜிஸ்ட்டர் செய்து கொடுப்பதாக தெரிவித்தார்.

ஏழை நெசவாளர்களின் துரதிருஷ்டம் காரணமாக மேற்படி டிப்டி ரிஜிஸ்ட்டிரார் மாற்றப்பட்டு, தற்போதைய டிப்டி ரிஜிஸ்ட்டிரார் **ஸ்ரீ ராமன்** அவர்கள் பதவியேற்றார். இவர் பதவி ஏற்றவுடன் எங்கள் சங்கப் பதிவு விஷயமாக பூரா விவரமும் தெரிவித்தோம். அன்றும் மாகாண கைத்தறி நெசவாளர் சங்கமும், கோவை மத்திய பாங்கின் அனுமதியும் கிடைத்தவுடன் பதிவு செய்து கொடுப்பதாக உறுதி கூறினார். ஆனால் மேற்படி இரண்டு இடங்களிலிருந்தும் அனுமதி கிடைத்தவுடன் பேட்டி கண்டோம்.

அதுசமயம், தான் நேரில் கிராமங்களுக்கு விஜயம் செய்த பிறகுதான் ரிஜிஸ்ட்டர் செய்ய இயலுமெனக் கூறினார். அதன்படியே — சர்க்கார் காரியாலயங்களில் நடைபெற்றுவரும் காலதாமதப்படியே பலநாள் கழித்து எங்கள் இரு கிராமங்களையும் பார்வையிட்டு, அதுபோது ஏழை நெசவாளர்

களின் துயரங்களுக்கு அனுதாபப்படுவதுபோல் பாவனை செய்து விரைவில் சங்கங்களை ரிஜிஸ்ட்டர் செய்து அனுப்புவதாக உறுதி கூறிச் சென்றார்.

இந்தச் சடங்குகள் வரை முடிவதற்கே சுமார் மாதங்கள் ஆறு ஆகிவிட்டன. இந்த ஆறு மாத காலத்தில் டிப்டி ரிஜிஸ்ட்டாரைப் பேட்டி காணச் சென்றது கணக்கிலடங்கா. எண்ணற்ற முறை ஈரோடு சென்று வந்த செலவு ஏழை நெசவாளியின் தலைக்குப் பெரும் சுமையாகின்றது. அடுத்த ஒரு பேட்டியில் டிப்டி ரிஜிஸ்ட்டாரின் சொந்த அபிலாஷைகளுக்கு, உண்மைக்கும், நேர்மைக்கும் மாறானதென சம்மதப்பட மறுத்ததால் பதிவு செய்வது நிராகரிக்கப்படுவதாக வார்த்தையில் தெரிவிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பங்களில் பொதுஜன சேவகர் என்பதை மறந்து, அதிகார போதையில் மரியாதைக் குறைவாகவும், கண்ணியமற்ற முறையிலும் நடந்துகொள்ளத் தலைப்பட்டார்.

சிலநாள் கழித்து நூல் நிலைமை சரியின்மையால் சங்கம் பதிவு செய்ய சாத்தியப்படாதென தன்னிட D Dis 5370/51 G எண்ணுள்ள 26—9—51 தேதிய உத்திரவின் மூலம் தெரிவித்தார். மாகாணத்திலுள்ள எந்தக் கூட்டுறவு அதிகாரிகளுக்கும் புலப்படாத இந்த விசித்திர யோசனை ஈரோடு வட்டார டிப்டி ரிஜிஸ்டிரார் ஸ்ரீ இராமன் அவர்களுக்கு மாத்திரம் புலப்பட்டது எங்கள் துரதிருஷ்டமே.

அதன்பேரில் நாங்கள் மேற்படி டிப்டி ரிஜிஸ்ட்டிரார் உத்திரவின்மேல் கனம் மாகாண ரிஜிஸ்டிராருக்கு அப்பீல் செய்தோம். இவ்வளவு துன்புறுத்தல்களுக்கிடையேயும் நாங்கள் தற்போதைய டிப்டி ரிஜிஸ்ட்டாரைப் பேட்டி காணத் தவறியதில்லை. மாகாண ரிஜிஸ்ட்டாருக்கு அப்பீல் செய்த தகவல் தெரிந்தவுடன் டிப்டி ரிஜிஸ்ட்டராரின் கோபம் எல்லை மீற ஆரம்பித்து, அப்பீல் செய்த இடத்திலேயே ரிஜிஸ்ட்டர் ஆகிவிடும் என்றும், வேண்டுமானால் தாண்டாம்பாளையம் நெசவாளர் சங்கத்திலேயே சேர்ந்துகொள்ளுங்கள் என்றும் கோபாக்கினி பிறந்தது. எங்கள் அப்பீலின் பேரில் மாகாண ரிஜிஸ்ட்டாரிடமிருந்து, எங்களுடைய விவகார எல்லையிலுள்ள நெசவாளர்களை, தாண்டாம்பாளையம் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ள தயாராக இருப்பதாகவும், அதில் சேர்ந்துகொள்ளும்படியும் மாகாண ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் L 150354/51 K2 எண் 26—11—51 தேதிய உத்திரவின் மூலம தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படியே நாங்கள் தாண்டாம்பாளையம் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் சேர்த்துகொள்ளும்படி எழுத்து மூலமான விண்ணப்பம் கொடுத்தோம்.

அதற்குமேற்படி சங்கத்தார் "நீங்கள் புதிதாக ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் உங்கள் சங்க எல்லையிலுள்ள அஙகத்தினர்களை எங்கள் சங்கத்தில் சேர்த்துக்கொள்வதாக எந்த சமயத்திலும் டிப்டி ரிஜிஸ்ட்டாரிடமோ, மாகாண ரிஜிஸ்ட்டாரிடமோ சம்மதம் தெரிவிக்க இல்லையே. அப்படியிருக்க மாகாண ரிஜிஸ்திரார் நாங்கள் சம்மதித்திருப்பதாக தெரிவித்திருப்பது வியப்பாகஉள்ளது" என்றுகூறி எங்களை அவர்கள் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள இயலாதிருப்பதின் கஷ்ட நஷ்டங்களையும் விளக்கி 17—12—51 தேதிய டைரக்டர்களின் தீர்மான மூலம் மறுத்துவிட்டதோடு, முன்னாள் டிப்டி ரிஜிஸ்ட்ராரின் ஆலோசனைப்படி எங்கள் சங்க கிளை விதி 1-ஐ கந்தசாமிபாளையம், சின்னமுத்தூர் கிராமங்களையும், அதைச் சேர்ந்த மஜராக்களையும் விலக்கித் தரும்படி 29—6—51 தேதியிலேயே மகாசபையார் தீர்மானித்துவிட்டார்கள் எனவும் தெரிவித்தார்கள்.

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும்
அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள், துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்.

நூல் நிலைமை சரியில்லாத காரணத்தால் சங்கம் பதிவு செய்ய இயலாதெனத் தெரிவித்து விட்டு, தாண்டாம்பாளையம் நெசவாளர் சங்கத்தில், துவக்கப்பட உத்தேசித்தும், ரிஜிஸ்டர் ஆக வேண்டியதைத் தவிர மற்ற சகலவித சடங்குகளும் முடிவு பெற்றிருந்ததுமான எங்கள் விவகார எல்லையிலுள்ளவர்களை சேர்த்துக்கொள்ள சம்மதப்படுவதாக ரிஜிஸ்ட்டாருக்குப் பொய்த் தகவல் கொடுத்திருப்பதும், 29—6—51 தேதிய மகாசபைத் தீர்மானத்திற்கு முரணாக சட்டதிட்டங்களுக்கு மீறி தன்னிஷ்டப்படி கிளைவிதிகளைத் திருத்தம் செய்வதும் குறிப்பிடத்தக்க ஆதாரமுள்ள அம்சங்களாகும்.

ஈரோடு டிப்டி ரிஜிஸ்ட்டார் 26—6—51 தேதி நூல் நிலை சரியில்லையெனத் தெரிவித்துவிட்டு 26—11—51 தேதிக்குள் ரிஜிஸ்ட்ரார் மூலம் வேறொரு சங்கத்தில் சேர்ந்துகொண்டு நூல் பெற்றுக் கொள்ளும்படி புத்தி புகட்டும் யோசனை கூர்ந்து கவனிக்கவேண்டியது. 60 நாட்களில் நூல் நிலைமை திருப்திகரமாக மாறிவிட்டதாக ஈரோடு டிப்டி ரிஜிஸ்ட்ரார் கருதி உத்திரவிடுவது புரியாத புதிராகும்.

கனம் மாகாண ரிஜிஸ்ட்ரார் அவர்களின் 26—11—51 தேதிய உத்திரவைப் புனராலோசனை செய்யும்படி மறுமுறையும் 17—1—52ல் விண்ணப்பித்துள்ளோம். அதற்கு இதுவரை பதில் இல்லை........எவ்வளவு புகார்களும், திறமையின்மையும் ஒரு உத்யோகஸ்தரைப் பற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தாலும் ;சிகப்பு நாடா சம்பிரதாயப்படி புகார் கூறப்படும் உத்தோகஸ்தருக்கே மறு கேள்வி கேட்டு திருப்பி அனுப்பப்படும் வழக்கத்தால்தான் பதில் இல்லை போலும்!

இப்போதைக்கு மாதங்கள் 10 மாயமாய் மறைந்துவிட்டன. மாதங்கள் என்ன; வருடங்களே மறைந்தாலும் ஸ்ரீ இராமனைப் போன்ற கெஜட் பதிவு உத்யோகஸ்தர்களுக்கு எப்படி ஏழை மக்களின் வாழ்க்கை புலப்படும்?

மாகாண ரிஜிஸ்ட்டாரும், சென்னை அரசாங்கமும் ஏன் கண்மூடி மவுனிகளாயிருக்கிறார்கள் என்பது புலனாகவில்லை. ஆகவே, தங்களைப்போன்ற பொதுநல ஊழியர்கள்தான் கண் விழிப்படையச் செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

விற்காததையெல்லாம் விற்று டிபாசிட் சேர்த்து வட்டியில்லாமல் ரூ. 10000 (பத்தாயிரம் இரு கிராமங்களிலுமாக) கோவை மத்திய பாங்கியில் செலுத்திவிட்டு, எவ்வித பலனுமின்றி பட்டினியால் வாடி வதங்குகிறோம்.

ஏழை நெசவாளர்களின் விடா பெரு முயற்சியாலும், தங்களைப் போன்ற பொதுநல ஊழியமே தொண்டெனக் கருதுபவர்களாலும் ரிஜிஸ்ட்ரார் உத்திரவாலும் சங்கம் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டாலும், புது மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டாலும் இந்த ஈரோடு டிப்டி ரிஜிஸ்ட்டாரால் நூல் விநியோகிக்கப்படுவதுமில்லை. நன்மைக்குப் பதில் துன்பங்கள்தான் அதிகரிக்கின்றன.

உதாரணம்; உப்புப்பாளையம், கல்லிவலசு, கொளாநல்லி (ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் தங்களுக்குத் தெரித்திருக்கலாம்) ஏனைய பல சங்கங்கள். காஞ்சிக் கோவில் விஷயமும் தங்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆகவே, எங்கள் சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியதோடு, கூட்டுறவு இயக்கத்திற்கு விரோதமான இவர் மாற்றப்படவேண்டியதற்கு ஆவன செய்ய வேண்டுகிறோம்.”

இப்படிக்கு தங்கள் அன்புள்ள, ஏழை நெசவாளர்கள்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்; No. A. 1601, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

எங்களிடம் 20s x 26s நூலில் தயாரித்த 30 x 16 கெஜம், 50 x 12 கெஜம் காடா பீசுகளும்’ 4 x 8 வேஷ்டி மடிகளும், 36s x 40s நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும், 50 x 12 கெஜம் பீசுகளும், 45 x 7 கெஜம் பல கலர்களில் பட்டுப்பேட்டுப் போட்ட சேலைகளும் ஏராளமாக எப்பொழுதும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! முன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்.

A. K. ஞானியார், செயலாளர். பெ. குருசாமி, தலைவர்.

பொது மார்க்கெட்டில்

ஏற்பட்டுள்ள பெரும்பீதி!

மந்தமாயிருக்கும் கைத்தறி ஜவுளி மார்க்கெட்டின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதுபோல பொது மார்க்கெட்டெங்கிலும் இன்று பீதி நிலவுகிறது! கையிலிருந்த பணத்தை வியாபாரச் சரக்காக மாற்றி குடோன்களிலும், பாங்கிகளிலும் இருப்பு வைத்துவிட்டு லாபத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த எல்லாவித வியாபாரிகளும் திகிலடைந்திருக்கின்றனர். சகலவித சரக்குகளின் விலையும் நாளுக்கு நாள் வெகு வேகமாக சரிந்து விழுந்துகொண்டேயிருக்கிறது. குறிப்பிட்ட சரக்குகளின் மார்க்கெட் கேந்திரங்கள் ஸ்தம்பித்து சில்லிட்டுவிட்டன!

உலகின் முக்கிய வியாபாரப் பொருள்களில் ஒன்றான பஞ்சு மார்க்கெட்டின் கதவுகள் சிலநாட்களாக மூடப்பட்டுவிட்டன! பம்பாய் தங்கம், வெள்ளி மார்க்கெட் விலையிறக்கத் துடி துடிப்பு அதிகரித்திருக்கிறது. வியாபாரிகள் கையிருப்பிலுள்ள சரக்குகளை பணமாக மாற்றுவதற்கு தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். உலகத்தின் எப்பக்கம் திரும்பினாலும் மார்க்கெட்டின் திடீர் விலை இறக்கத்தால் அபாயச் சங்கொலி கிளம்பியிருக்கிறது. ஆனால் — உலகப்போருக்குப் பின்னும் எவ்வகையிலும் விலையிறக்கக் காட்சியைக் காணாத, தேவைக்கு வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்கள் மட்டும் இந்தப்பொது மார்க்கெட்டின் விலை இறக்கத்தைக் கண்டு குதூகலிக்கின்றனர்.

உலக மார்க்கெட்டின் முக்கிய வியாபாரப் பொருள்களான. தேங்காயெண்ணை, நிலக்கடலை, கடலை எண்ணெய்; அமெரிக்காவின் டாலர் மதிப்புப்பெற்ற மிளகு, ஏலம், இஞ்சிபோன்றபொருள்கள் விலை இறக்கத்தால் வியாபாரிகளைத் திண்டாட வைத்திருக்கிறது. மார்க்கெட்டின் பலகேந்திர இடங்களில் குறைந்த விலையிலும் சரக்குகளை வாங்குவாரில்லை! வியாபாரிகள் தங்கள் கைவசமிருக்கும் இருப்புச் சரக்கை விற்பனை செய்ய வகையில்லாமல் தவியாய்த் தவிக்கின்றனர். பாங்கிகளில் சரக்குகளின் பேரில் வாங்கிய கடன்களை குறிப்பிட்டதேதிகளில் திருப்பித் தர முடியாமையினால். அந்த சரக்குகள் பகிரங்க ஏலத்தில் மட்டமான இறக்க விலைக்கும் வாங்குவாரில்லாமல் மார்க்கெட் விழிக்கிறது! பருத்தி மார்க்கெட்டின் இந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாமல் மான்செஸ்டரிலுள்ள சில ஜவுளி மில்கள் கூட மூடப்பட்டிருக்கின்றன!

மா. மாரிமுத்து, ஈரோடு

எகிப்து, ஈரான், டுனிஷியா போன்ற மத்திய தரைக்கடல், மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் விழிப்பாலும்; ஏகாதிபத்திய வெறியர்கள் அந்த நாடுகளைத் தங்கள் சதித்திட்ட வலைக்குள் போட்டுக்கொள்ளச் செய்யும் தில்லுமுல்லுகளாலும் எகிப்து பஞ்சு மார்க்கெட்டில் தடுமாற்றங் கண்டிருக்கிறது! ஆசியாவின் கிழக்கே வளர்த்தப்பட்ட கொரியப் போர்த் தீ அடங்கி, சமாதானம் ஏற்படப்போகிறதென்று அமெரிக்கா அரசாங்க அறிக்கையிலிருந்து கசிந்த செய்தியைக் கண்டு அமெரிக்க மார்க்கெட்டில் ஸ்தம்பிதம் நிலவுகிறது! அமெரிக்காவின் கைப்பிள்ளையான பிரிட்டனும் அமெரிக்க நிலவரத்தால் ஊட்டப்பட்டு தத்தளிக்கிறது! உலகின் வட்டிக் கடைக்காரன் அமெரிக்காவே உலகப் பொது மார்க்கெட்டில் காலைவிட்டு குட்டையைக் குழப்பி விளையாட ஆரம்பித்து விட்டது!

இந்தத் தடுமாறும் உலகப்பொது மார்க்கெட்டின் விலையிறக்க விளையாட்டில் நம் இந்திய மார்க்கெட்டும் கலந்துகொள்ளாமல் தப்பிவிட முடியாதல்லவா? உலகப் பொது மார்க்கெட்டில் விலை சரிந்துவிழுந்துகொண்டிருக்கும் இந்தக் குழப்பமான சமயத்தில் தான் நம் பார்லிமெண்டில் இடைக் காலத்திய பட்ஜெட்டில் வரிப்பளுக் குறைப்பு இல்லையென்றதைக் கண்ட பெருத்த வியாபாரப் புள்ளிகளும் பணமூட்டைகளை இறுக்கிக் கட்டிவைத்துவிட்டனர்.

சர்க்கரை ஏற்றுமதியைத்தடை செய்திருப்பதாலும், சணல் ஏற்றுமதி வரியைக் குறைத்திருப்பதாலும் சர்க்கரை, வெல்லம் உள்நாட்டு மார்க்கெட்டிலும், சணல் வெளி மார்க்கெட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது! சரக்குகளின் விலையில் பேரம்செய்யும் ஸ்பெக்குலேஷன் (சூதாட்ட) வியாபாரிகளின் கைங்கரியத்தால்கையிருப்புச் சரக்குகளை எண்ணி எண்ணிபெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் அபலைவியாபாரிகளை கதிகலங்கவைத்துக்கொண்டிருக்கிறது! பொதுவாக எங்குபார்த்தாலும் பணமுடை பெருகிவிட்டது! நஷ்ட அமுக்கத்திலிருந்து தலையெடுக்க முடியாத எல்லா வியாபாரிகளிடமிருந்தும் அபாயச் சங்கொலி கிளம்பி விட்டது!

முடமாகிக்கிடக்கும் கைத்தறி ஜவுளி மார்க்கெட் இந்தப்பொது மார்க்கெட்டின் விலைச்சரிவாகிய தடுமாற்றத்திலிருந்து கொஞ்சகாலத்திற்கு முன்பே விலகி முட

மாகிவிட்டது! கைத்தறி: நெசவாளி சம்பந்தப்பட்ட மட்டில் கட்டுப்பாட்டு விலைக்கும் இரண்டொரு ரூபாய் அதிக விலை வித்தியாசத்தில் கருப்புச்சந்தையில் நூல் கிடைத்தாலும், ஜவுளி மார்க்கெட்டின் பயங்கர மௌனத்தாலும், விலை இறக்கத்தாலும் நூல் விலையிறக்கம் சமயத்திற்கு பயன் அற்றதாகிவிட்டது.

உலகப் பொது மார்க்கெட்டின் இந்தக்குழப்ப நிலையில் வியாபாரிகளெல்லோரும் நஷ்டப் பீதியாலும், பணமுடையாலும் கதறிக் கொண்டிருக்கின்றனர். இந்த உலக மார்க்கெட் பீதி நிலையில் நம் அரசாங்கம்காத்திருந்துபார்ப்போமென்றபற்றற்ற போக்கில்நடந்து கொண்டு மந்திரிகள் ஒவ்வொருவரும்முன்னுக்குப்பின் முரணாக, நாட்டின் நலத்தை மறந்து வானளாவப் பேசிக்கொண்டிருந்தால்-நம் உள்நாட்டு மார்க்கெட்டை தற்காலிகமாகப் பாதுகாக்க தவறிவிடுவார்கள். வியாபாரப் பொருள்களின் விலைகளில் பேரம் செய்யும் ஸ்பெக்குலேஷன் வியாபாரிகளின் போக்கைத் தற்காலிகமாவது கட்டுப்படுத்தி, விலையிறக்கத்தால் தவிக்கும் வியாபாரிகளுக்கு அபயம் அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். விலைச்சரிவினால் மார்க்கெட்டின் நிலை கட்டுக்கடங்காமல் போனபிறகு அதையும் இதையும் செய்து மார்க்கெட்டின் தடுமாற்றப் பிரச்னைக்கு நிவாரண வழி வகுப்பதை விட, விலையிறக்க அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் பொது மார்க்கெட்டின் நிலையை நன்கு கூர்ந்து கவனித்துவரவும், சரிந்து விழுந்துகொண்டிருக்கும் விலையைத் தாங்கிப் பிடிக்க வழிவகுக்கவும் ஆலோசனை கூறவும் தற்காலிகமாக கண்காணிப்பாளர்களை உடனடியாக நியமிக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

நாட்டின் நலத்தில் அக்கரை கொண்டுள்ள பொருளாதார அறிஞர்கள், மார்க்கெட் அனுபவம் மிக்க வியாபாரப் பெரும் சங்கங்கள், பொதுமக்களின் கருத்தை எதிரொலிக்கும் பத்திரிகையாளர்கள் இவர்களின் கருத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கவேண்டும். நம் நாட்டின் பற்பல ராஜ்யங்களில் நிலையான மந்திரி சபையே அமைக்கப்படாமலிருக்கும் இந்த நிலையில் பொது மார்க்கெட்டின் விலையிறக்கப்பிரச்னை கட்டுக்கடங்காமல் போய் பொருளாதாரசீர்குலைவுஏற்பட்டுவிடாமல் தடுக்க தக்கபாதுகாப்பு முயற்சி செய்ய உடனடியாக அரசாங்கம் முன்வரவேண்டும். ○

இருண்ட வாழ்வை உடைத்தெறி!

[எம். கல்யாண சுந்தரம், கோவை.]

இன்னும் உறக்கமேன்! கண்ணைத் திறந்து பார்!
இருண்ட நின் வாழ்வை உடைத்தெறிந்திடவே (இன்)

எழு எழு தோழனே! என்னரும் தோழனே!
இத்தருணமிதை வீணாக்காதே! — நின்
பழுதிலா நெய்தொழில் அழிவுற நீயும்
பஞ்சையனாகிடச் சம்மதமோ? — தீயில்
புழுவினைப் போலே மடிந்திடலாமோ?
பொன்விளை நம் இந்திய நாட்டினிலே! — இன்று
அழுது புலம்பிச் சிந்திய கண்ணீர்
ஆறாய்ப் பெருகினும் பயனுண்டோ? — இல்லை (இன்)

உண்டு கொழுத்து உறங்கிடும் வீணர்
உலுத்தர் மரபினன் நீயல்லவே! — துயர்
கண்டும் இரங்கிடாக் கல் நெஞ்சக் கூட்டக்
கயவர்கள் மரபினன் நீயல்லவே! — பாரில்
பண்டு பெருமையின் தொழிலை வளர்த்தி
பாமரர் முதல் பணக்காரர் வரை — யுள்ள
எண்டிசை மாந்தர் மானம் மறைத்த நீ
ஏழ்மையில் உழன்றிட நியாயமிதோ? — அல்ல (இன்)

ஆடிடும் கால்கள் அசைந்திடும் கரங்கள்
அவுத்துதிர்த்துக்கொட்டிடும் ரத்த வியர்வை — பாவில்
ஓடிடும் இழையில் இருவிழி சோர
உழைத்த உடலமின்று துரும்பாகி, — நின்
வாடிடும் பெண்டு பிள்ளைகளோடு
வன்கொடும் பசிப்பிணிக் கிரையாகி, — சொந்த
வீடிழந்தும் உயிர்க் காதலியாளின்
மீதிய தாலியும் விற்றுண்ணவோ? — வேண்டாம் (இ)

ஒட்டிய வயிறோ டுருகினும் உடலே
உழைத்திடச் சலியாதோன் நீயல்லவோ? — ஒரு
சொட்டு ரத்தம் உடம்பில் இருந்திடும் வரையில்
சோம்பலை எதிர்ப்பவன் நீயல்லவோ! — இன்று
கிட்டிடும் நூல் ஐந்து நாள்வரும் அதற்கும்
கேடுகளோ பல சொல்ல எளிதோ! — அதில்
பட்டதோர் அல்லல் பயங்கர நிலையே
பறந்திடச் செய்யவே எழு எழு நீ! — ஜல்தி! (இன்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே காலத்தில் நம் ராஜ்யத்தில் எங்கெல்லாம் சாத்தியமோ அந்த இடங்களில் எல்லாம் பருத்தி சாகுபடிக்கு சர்க்கார் வழிவகை செய்யவேண்டும். குறிப்பாக தஞ்சை டெல்டா பிரதேசங்களில் பருத்தி சாகுபடி செய்தால் பருத்தி உற்பத்தி அதிகரிப்பதுடன்; அதன் தழைகள், அது விளைகின்ற நிலத்திற்கே எருவாக அமைந்து அடுத்த போக நெல் விளைச்சலில் உபரியும் காணும் என ராஜ்ய விவசாய நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்த ஆலோசனையை அதிகாரத்திற்கு வரும் புதிய மந்திரி சபையினர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம் தான் ராஜ்ய கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையைப் பூர்த்தி செய்யமுடியும். அதே காலத்தில் உபரி நூல் உற்பத்தியை வெளிராஜ்ய நெசவாளர்களுக்கும் அனுப்ப முடியும் என்பதை கவனப்படுத்துகிறோம்.

பஞ்சு வினியோகம்.

இன்றுள்ள பஞ்சு வினியோக முறையும், கொள்முதல் ஏற்பாடும் பருத்தி விவசாயிகளை உற்சாகப்படுத்துவதாக இல்லை. பருத்திக்கு மறைமுகமாக நல்ல விலை கிடைப்பதால்தான் பருத்தி விவசாயம் நடைபெறுகிறதே தவிர, உண்மையில் கொள்முதல் முறையை எடுத்துக்கொண்டால் விவசாயிகள் வெறுக்கிறார்கள்.

காரணம்; விவசாய இலாகாவின் வீணான கொந்திரவுகளும், நடைமுறைக்கு ஒத்துவராத அனாவசியமான கட்டுப்பாடுகளும் தான் என்பது தெளிவு. எனவே, பருத்தி விவசாயிகளுக்கு விதை மட்டும் விவசாய இலாகாவால் கொடுத்துவிட்டால் போதாது. அதைச் சாகுபடி செய்யவும், மகசூல் எடுக்கும் வரையேற்படுகிற இடைக்கால விவசாய செலவுகளுக்கும் அந்த விவசாயிக்கு சர்க்காரின் கஜானாவிலிருந்து குறைந்த வட்டிக்குக் கடன்கள் தரப்படவேண்டும்.

இன்று பண வசதியில்லாத பலர் பருத்தியை நிலத்தில் தூவுவதற்கு முன்னதாகவே, விவசாய முட்டு வழிச் செலவுக்குப் பணமில்லாமல் திண்டாடுவதால், பல பெரிய பருத்தி வியாபாரிகளிடம் தன் நிலத்தில் விளையும் பருத்தியை அவருக்கே விலைக்குக் கொடுப்பதாகக் கூறி ரூ. 2 விருந்து 3 வரை வட்டிக்கு சம்மதம் தெரிவித்துக் கடன் பெறுவதால், பருத்தி விளைந்து விற்கும்போது கடன் கொடுத்தவரின் இஷ்டத்திற்கு விரோதமாகப் போகமுடியாமல், மார்க்கெட் நிலவரத்திற்குக்கூட சில சமயங்களில் விற்க முடியாமல் போய் விடுகிறது.

தவிர, பருத்தியை விவசாயிகளுக்கு விற்றுத் தருவதற்காக வென்றே 'காட்டன் மார்க்கெட்'டுகள் வேறு இருக்கின்றன. அவைகள் அமைக்கப்பட்டுள்ள நோக்கம் என்னவோ நல்லதாகத் தான் இருக்கிறது. ஆனால் அதிலும் பெரிய பருத்தி வியாபாரிகளே அங்கம் வகித்து வருவதால் அதனுடைய லட்சியப் பலனை பருத்தி விவசாயிகள் அடையமுடிவதேயில்லை.

ஆகையால் பருத்தி விவசாயிக்கு குறைந்த வட்டிக்குப் (நீண்ட காலத் தவணைகூடத் தேவையில்லை.) பணம் கொடுத்து உதவுவதோடு, பருத்தி விளைந்ததும் ரகம் வாரியாக நியாயமான விலை நிர்ணயம் செய்து அதை சர்க்காரே கொள்முதல் செய்யவேண்டும். இதில் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் ஈடுபடுத்தலாம். வேறு எந்த வழிகளிலும் ஒரு கொட்டைப் பருத்திகூட மில்களுக்கு கிடைக்காமல் பார்த்துக்கொண்டு இப்படிக் கொள்முதல் செய்த பருத்தியை ஒவ்வொரு பஞ்சாலைகளின் நூல் நூற்பு ஸ்பிண்டில்களின் எண்ணிக்கையின்

(16-ம் பக்கம் பார்க்க.)

நெசவாளர் தலைவர்

கனகராஜன் மறைவு.

உடுமலைப்பேட்டை தாலூக்கா கைத்தறி நெசவாளர்களின் அன்பைப் பூரணமாகப்பெற்றவரும், அந்தத் தாலூக்கா நெசவாளர்களுக்காக தன்னால் முடிந்த அளவு வஞ்சனையின்றி வேலை செய்தவரும், முன்னாள் நகர சபைத் தலைவருமான திரு. எம். எஸ். கனகராஜன் அவர்கள் 15-2-52-ந் தேதியன்று காலமான செய்தி கேட்டு நாம் வருந்துகிறோம்.

அவர் தி. மு. க. பிரமுகர். நீண்டகால அரசியல்வாதி. முற்போக்கான எண்ணம் கொண்டவர். சமதர்மத் தத்துவப் பிரியர். சிறந்த எழுத்தாளியும், பேச்சாளியும் கூட. கோவை ஜில்லா கைத்தறி நெசவாளர் இயக்கம் 1946-ம் ஆண்டு வேர்விட்டுத்தழைக்க ஆரம்பித்த போது நம்முடன் பூரணமாக ஒத்துழைத்து சேவை செய்தவர்.

அன்னார் பிரிவால் துக்கப்படும் அவரது குடும்பத்தினருக்கும், அத்தாலூக்கா நெசவாளர்களுக்கும் நமது அனுதாபத்தைக் கூறி, ஆறுதல் சொல்லுகிறோம்.

— ஆசிரியர்

நித்திய தேவைக்குசிறந்த
மணீஸ் காபி


யூனியன் காபி சப்ளை கம்பெனி
கோயமுத்தூர்

கைத்தறி

வேட்டி புடவைகள் நெய்திடுவோன் — அவன்
வீட்டிலே பார்த்தால் துணிப்பஞ்சம்

— திருமூர்த்தி

● கோவை 15—3—52. ●

அகவிலை இறக்கம்

சென்ற மூன்று வாரங்களாக மார்க்கெட்டுகளில் பண்டங்களின் விலைவாசிகள் வெகுவாகக் குறைந்து போயுள்ளன. இந்தத் திடீர் விலை இறக்கம் பலருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியுள்ளது. சிலருக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்களை நஷ்டமுமேற்படுத்தியிருக்கிறது. குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் கோடானுகோடிப் பொதுமக்களுக்கு இவ்விலை இறக்கம் சந்தோஷத்தையே உண்டாக்கியுள்ளது.

விலைவாசி இறக்கம் முறையாக ஏற்படாமல் திடீரென ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொருளாதாரத்தில் சீர்குலைவுஏற்படுமெனப்பல முற்போக்காளர்கள் கருதுகிறார்கள்—எண்ணங்களை வெளியிடுகிறார்கள். விலைவாசி இறக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை சமூகத்தில் பெரும்பாலோருக்குப் பரிசளிக்குமென நம்பப்படுகிறது. அதன் காரணமாக சாதாரண மக்களின் வாங்கும் சக்தி மீண்டும் பாதிக்கப்படலாம் என சொல்லப்படுகிறது. இது முற்றிலும் உண்மைதான் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே நம்மால் காண முடிகிறது.

ராஜ்ய மெங்கிலுமிருந்து நமக்கு வந்துள்ள செய்திகள் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமான கைத்தறி ஜவுளிகள் தேங்கிக் கிடப்பதாகவும், அதன் காரணமாக நெசவாளர்களுக்கு வேலை கிடையாது தவிக்கின்றனர் என்றும் தெரிவிக்கின்றன. 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாய் வரை ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் துணிகள் தேங்கியுள்ளன. இதைப்போல் எவ்வளவோ அதிக அளவில் தனிப்பட்ட வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோரிடமும் ஜவுளி தேங்கியிருக்கிறது. இதனால் நெசவாளியின் வாழ்க்கை படுநாசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினி போன்ற நிலை நெசவாளியின் குடும்பத்தில் ஏற்பட ஆரம்பித்துவிட்டது.

மாஸ்டர் வீவர்களிடமோ, அல்லது நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களிலோ இல்லாது சொந்தமாக நூல் வாங்கி ரொக்கத்திற்கு துணி தயார் செய்து விற்பனை செய்துவந்த கைத்தறி நெசவாளர்களின் நிலை சொல்லத்தரமில்லை. ஒன்றுக்குப் பாதியாக அவர்களின் துணி விலை ஏலம் கோரப்படுகிறது. உள்ளதையும்: விற்றுப்பாப்பராகவேண்டிய ஸ்திதியிலேயே ரொக்க நெசவாளர்களின் நிலை மோசமாகிக்கொண்டு போகிறது.

மில்களில் துணி 50 சதவீதம் விலை குறைத்துவிற்கப்படலாமென ஒரு செய்தி வேறு அடிபடுகிறது. நூல் விலைகள் கூட மில் வாசல் விலைக்கும் குறைவாகவே மார்க்கெட்டில் தாராளமாகக் கிடைக்கிறது. பண நெருக்கடி பஞ்சாலை முதலாளின் மென்னியைப்பிடித்து இறுக்கி பஞ்சு கொள்முதல் செய்ய முடியாமல் செய்துள்ளது. நிலைமை இப்படியே சில வாரங்கள் நீடித்தால் பல பஞ்சாலைகள் இழுத்து மூடப்படலாமென்கிற பயம் நிலவுகிறது. கஷ்டப்படுகிற கைத்தறி நெசவாளரோடு கைகோர்த்து மில் தொழிலாளர்களும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாவார்கள் என திட்டமாக நம்பலாம்.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் தங்கள் கையிருப்பை விற்கமுடியாமலும், தங்கள் நூல் கோட்டாவை எடுக்கப் பணமின்றியும் திண்டாடுகின்றன. அதன்காரணமாக ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்க குடோன்களில் நூல் பேல்கள் இப்போதே தேங்க ஆரம்பித்துள்ளன. அவர்கள் இதுவரை பாடுபட்டு சேமித்து வைத்த நிதிகள் யாவும் கரைந்து விடும்போல் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட நிலையை—மக்களின் வாழ்க்கையில் நெருக்கடியை இவ்விலையிறக்கம் உண்டாக்கியிருக்கிறது. இதற்குக்காரணம், நம்நாட்டு ஏற்றுமதி வர்த்தகம் யுத்த வெறி பிடித்தலைந்த டாலர், ஸ்டர்லிங் நாடுகளுடன்மட்டுமே நடைபெற்றுவந்ததால்தான்என்பது தெளிவு. இன்று அந்நாடுகள் யுத்த தயாரிப்புகளை நிறுத்திக்கொண்டதும் ஏற்றுமதி வர்த்தகம் நின்றுபோய் உள்நாட்டில் ஒரு பெரிய ஸ்தம்பிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

காமன்வெல்த் நாடுகளின் நிதி மந்திரிகள் மகாநாட்டிற்குப் பின் பிரிட்டனும், தென் ஆப்ரிக்காவும் தங்களின் இறக்குமதியை 40 சதவீதம் குறைத்துக்கொள்வதென்றுமுடிவுசெய்திருக்கின்றன. அதன்மூலம் நம் நாட்டு கைத்தறி ஜவுளிகள் தென் ஆப்ரிக்காவில் நடைமுதல் வருடத்தில்

ஏற்றுமதியாவது மேலும் குறைபலாம். அதேபோல அண்டையிலுள்ள பாகிஸ்தானிலும் நம் நாட்டோடு செய்துகொண்டிருக்கும் வர்த்தக ஒப்பந்தத்தை ரத்து செய்துகொள்ளவேண்டுமென்ற பேச்சு பலமாக அடிபட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி நேர்ந்துவிட்டால் ஒரு கெஜம் கூட கைத்தறித் துணி பாகிஸ்தானுக்குச் செல்லாது. மேலும் கைத்தறித் துணியின் மார்க்கெட் பிரச்னை மிகவும் ஆழமானதாக ஆகிவிடும்.

இந்தக் குழப்பமான நிலைமைக்கு நம் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகக் கொள்கையும், பிரிட்டிஷ், அமெரிக்க அரசியல், பொருளாதார உறவுகளுமேதான் காரணங்கள் எனப் பல அறிஞர்கள் கூறுகின்றனர். ஸ்ரீ மகதாப் அவர்களே ஒப்புக்கொள்கிறார்: “ தவறான பாதையில் செல்வதற்குத்தான் ஆலோசனைகள் தரப்பட்டன...........அவர்களுடைய யோசனைகளுக்கு இணங்கியஇடத்தில் ஏதாவது ஒரு தீமையும் ஏற்படத்தான் செய்தது” என்று. நாட்டின் நலன் கருதாது, பிரிட்டிஷ், அமெரிக்க யுத்த வெறியர்களோடு வர்த்தகம் செய்து பணம் திரட்ட திட்டமிட்டுச் சதி செய்தவர்களின் ஆலோசனையின் விளைவுதான் இது என்று வேறு பாஷையில் ஸ்ரீ மகதாப் அவர்கள் கூறுகிறார். இதன் மூலம் நேரு சர்க்காருக்குள்ள ஒரு பலஹீனத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் என்கின்ற உண்மையை நாம் பார்க்க வேண்டும். அதுதான் சர்க்காரில் உள்ள அமைச்சர்களுக்கு ஒரு சரியான அன்னிய நாட்டு வர்த்தகக் கொள்கையில்லையென்பதும், யாருடன் அரசியல், பொருளாதார உறவு வைத்துக்கொள்ள வேண்டும், யாருடன் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதும்தான்.

நம் நாட்டிற்கு நீண்டகாலக்கடனாக கோதுமை கொடுத்துப் பசி தீர்க்க வந்த படியளக்கும் பரமசிவனாகக் காட்சியளிக்கும் அமெரிக்கா, தன் ஆதிக்கத்திலுள்ள ஜப்பானிலிருந்து துணியை உற்பத்தி செய்து கொண்டுவந்து நமது கைத்தறி ஜவுளியின் நீண்டகால மார்க்கெட்டான பர்மா, மலேயா, இந்தோனேஷ்யா ஆகிய நாடுகளில் நம்மோடுபோட்டியிட்டுநமதுவர்த்தகத்தைஅடியோடு அழித்திருக்கிறது. இங்குள்ள கைத்தறிக்காரர்களின் குடும்பங்களைப்பட்டினி போட்டுக் கொல்லுகிறது. இந்தியப் பஞ்சாலைத் தொழிலையும் மறைமுகமாக நசுக்க முற்பட்டுவிட்டது.

நமது உணவு நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டதோடு மட்டும் அமெரிக்கத் திமிங்கிலங்கள் நின்றுவிடவில்லை. பஞ்சு பற்றாக்குறையையும் பூரணமாக இவ்வாண்டு உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை ஸ்ரீ மகதாப் அவர்களே “ அமெரிக்கப் பஞ்சு இந்தியாவுக்குத் தாராளமாக வரத்தொடங்கியிருக்கிறது. மில்கள் பெரும் அளவில் அமெரிக்கப் பஞ்சு வாங்குவதால் உள்நாட்டுப் பஞ்சு விற்பனை பாதிக்கப்பட்டிருக்கிறது” எனக் கூறியுள்ளார். நம் நாட்டுப் பருத்தி விவசாயிகளைப் படுகுழியில் தள்ள அமெரிக்கா திட்டமிட்டுவிட்டது. பஞ்சு வர்த்தகத்தையும் படுநாசத்திற்கு அமெரிக்கா கொண்டுவந்திருக்கிறது. நாளாவட்டத்தில் பொருளாதாரத்துறையில் நம் நாடு அமெரிக்க ஆதிக்கத்தின்கீழ் வந்துவிடுமோ என அஞ்சவேண்டியிருக்கிறது.

இதை நாம் சொல்லுகிறபோது; இந்திய மில்கள் அமெரிக்கப் பஞ்சை வாங்காமல் விட்டுவிட்டால் அதற்கு இங்கு எப்படி கிராக்கியிருக்கும்? நமது மில் முதலாளிகள் அமெரிக்கப் பஞ்சை விரும்பி வாங்குவதால்தானே அவன் இங்கு இறக்குமதி செய்கிறான் என்று கேட்கலாம். இந்தக்கேள்வி நியாயமானதும்கூடத்தான். அமெரிக்கப் பருத்தியில் நூற்கப்படும் நூல் அ. இ. நூல் வினியோகத் திட்டத்திற்குள் வாராததாலும், மில் முதலாளிகளின் இஷ்டவியாபாரத்திற்கே மத்திய சர்க்கார் அந்நூலை அனுமதித்திருப்பதாலும் தான் அமெரிக்கப் பருத்தியை மில் முதலாளிகள் வாங்குகிறார்கள் என்கின்ற உண்மையை அப்படிக் கேள்வி கேட்பவர்களின் கவனத்திற்கு நாம் கொண்டுவருகிறோம்.

மொத்தத்தில் அமெரிக்கத் தலையீடு அதிகமாக இருக்கும்வரை உள்நாட்டுப் பொருளாதாரத்தில் இது போன்ற சீர்கேடுகள் இருக்கத்தான் செய்யும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, அமெரிக்கத் தலையீடற்ற சுதந்திரமான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை ஒன்றை வகுத்து இந்நாட்டு மக்களின் சம்மதம் பெற்று நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் வர்த்தகத்தில் அபிவிருத்தியும், ஸ்திரத் தன்மையும் ஏற்படும்.

அல்லாதவரை ஸ்திரத்தன்மை மார்க்கெட்டில் ஏற்படுவது போன்ற ஒரு ‘பிரம்மை’தான் சிருஷ்டிக்கப்படும். அது எவ்வளவு நாட்களுக்கு நிலைக்கும் என்பதை நம்பி ஒன்றும் யாரும் செய்யமுடியாது. மார்க்கெட்டில் குழப்பம்; கொஞ்சம் ஓய்வு; மீண்டும் குழப்பம்; என்பது போன்ற நிகழ்ச்சிதான் தொடர்ந்து நடைபெறும். எனவே, நாட்டின் நலன் பேணும் மக்கள் ஸ்தபானங்களின் ஒத்துழைப்பை நாடி, வர்த்தகத்தில் ஸ்திரத் தன்மையேற்படவும், அன்னிய நாடுகளில்நமக்கு இருந்துவந்த வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்தவும் எவருடைய தலையீடுமற்ற ஒரு சுயேச்சையான வெளிநாட்டு, உள்நாட்டு தொழில், வர்த்தகக்கொள்கையொன்றை வகுக்க மத்திய சர்க்கார் முன்வரவேண்டுமென்று நாம் கோருகிறோம். ●

டாக்டர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு ஆனால்

சாய, அச்சுத் தொழில்களுக்கு மட்டும் இல்லை

— மா. கி. சா. —

"சொந்தமாக டிஸ்பென்சரி வைத்திருக்கும் தனிப்பட்ட டாக்டர்கள் தமது நோயாளிகளுக்கு மட்டும் தருகின்ற மருந்துகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். இந்த உத்திரவு 1948 ஏப்ரல் 7-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது"

சென்னை ராஜ்ய சர்க்காரின் இம்முடிவு இரண்டுவாரங்களுக்கு முன்னால் வெளியாகியுள்ளதை நேயர்கள் பத்திரிகைள்மூலமாகப் பார்த்திருக்கலாம். இம்முடிவுக்கு சர்க்கார் வந்ததற்குநாம் அவர்களை பாராட்டுகிறோம் — வரவேற்கிறோம்.

1952-ம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில்பிரசுரமாகியுள்ள இந்த உத்திரவு, எந்தத்தேதியிலிருந்து டாக்டர்களுக்கு இந்த வரிச் சலுகை யளித்திருக்கிறது என்பதையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதன்படி பார்த்தால் ஏற்கனவே — அதாவது 1948 ஏப்ரல் 7-ம் தேதியிலிருந்து இதுவரை சொந்த டிஸ்பன்சரி வைத்துக்கொண்டு அதிலிருக்கும் மருந்துகளை எடுத்துத்தனது வாடிக்கையாளர்களான நோயாளிகளுக்கு உபயோகப்படுத்தியிருந்து அதற்காக சர்க்காருக்கு விற்பனை வரி செலுத்தியிருந்தால் நிச்சயம் அத்தொகை திரும்பக் கிடைக்குமெனத் தெரிகிறது.

தவிர, தனது டிஸ்பென்சரியிலிருக்கும் மருந்தை வெளி நோயாளிகளுக்கு விலைக்கு விற்றாலோ, அல்லது வேறு முறைகளில் அவைகளைப் பணமாக்கினாலோ அதற்கு விற்பனைவரி உண்டென்றும் அவ்வுத்திரவின் வாசகங்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

சர்க்கார், இவ்விற்பனை வரி விலக்கிற்குச் சொல்லியுள்ள காரணத்தை நாம் பூரணமாகஏற்றுக் கொள்ளுகிறோம். அதேகாலத்தில், எக்காரணத்தைச் சொல்லி விற்பனை வரி விலக்களிக்க சர்க்கார் முன்வந்தனரோ, அதே காரணங்கள் பூரணமாகப் பொருந்தும் வேறு தொழில்களுக்கு மட்டும் ஏன் இதுமாதிரியான விற்பனைவரிச் சலுகை அளிக்கக்கூடாதென்றும் கேட்கிறோம்.

டாக்டர்கள் தங்களது சொந்த டிஸ்பென்சரி (ஆஸ்பத்திரி) க்கு தேவையான மருந்துகளை, அவைகள் தயாரிக்கப்படும் கம்பெனிகளிடமிருந்தே பெறுகிறார்கள். அதை அவர்கள் வெளியில் விற்கிறார்கள்; மற்றும் தங்களிடமே சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோயாளிகளுக்கும் கொடுக்கிறார்கள். தாங்களே சிகிச்சை செய்யும் நோயாளிகளிடமிருந்து மருந்தின் கிரயத்தையும், அதற்கு மேல் அவர்கள் சிகிச்சை பெறுவதற்காக உள்ள தொகையையும் ஒட்டுமொத்தமாக சேர்த்து வாங்கிவிடுகிறார்கள்.

சில டாக்டர்கள், தங்கள் சொந்த டிஸ்பென்சரியிலிருந்து வெளியில் யாருக்கும் மருந்தை விலைக்கு விற்காமல் தங்களின் சொந்தத் தொழில் உபயோகத்திற்கே மருந்தைத் தருவித்து வைத்துக்கொண்டு தொழில் நடத்துகிறார்கள். இதைத்தான் நாம் நமது தினசரி வாழ்க்கையில் பார்த்துவருகிறோம்.

இதேபோலத்தான் சாய & அச்சுத்தொழிற்சாலையாளர்களும் தங்கள் தொழில் தேவைக்கான— விற்பனைக்கே இல்லை — சாயப் பொருள்களையும், கெமிகல்களையும் அவைகள் தயாரிக்கப்படும் கம்பெனிகளிடமிருந்து நேரிடையாகவும், சம்பந்தப்பட்ட ஸ்டாக்கிஸ்ட்டுகளிடமிருந்தும் டாக்டர்கள் பெறுவதைப்போல் விலைக்குப் பெறுகிறார்கள். எப்படி டாக்டர்களிடம் நோயாளிகள் வந்து சிகிச்சை செய்துகொள்கிறார்களோ (மருந்துகள் உட்பட) அதேபோல தறிகாரர்களும், கூட்டுறவு நெசவாளர் ஸ்தாபனங்களும், கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களும் தங்களிடமுள்ள நூலையும், துணியையும் கொடுத்து சாயம் தோய்த்துக்கொண்டும், துணிகளை சீட்டியாகவோ, சேலையாகவோ அச்சடித்துக்கொண்டும் போகிறார்கள்.

டாக்டர்கள் எப்படி தங்களது மருந்துக்கான பணத்தையும், சிகிச்சைக்குரிய தொகையையும் பெற்றுக்கொள்கிறார்களோ, அதேபோல சாய, அச்சுத்தொழிற்சாலையாளர்களும் நூல், துணி மீது ஏற்றப்படுகிற சாயத்திற்கும், அதைச்செய்துகொடுப்பதற்கான கூலியையும்சேர்த்து தொகையை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறுகிறார்கள். இதில் "வியாபாரம்" என்கிறபிரச்னையே எழுவதில்லை. இருந்தாலும்கூலிக்காக சாய, அச்சுத் தொழில் செய்வோர் விற்பனை வரி செலுத்த

வேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது. கொடுக்க காரண காரியத்தோடு மறுப்பவர்களைக் கோர்ட்டுகளில் கொண்டுபோய் நிறுத்தப்படுகிறது.

எக்காரணத்திற்காக டாக்டர்களுக்கு விற்பனை வரிச் சலுகை தரப்படுகிறதோ, அக்காரணங்கள் எல்லா வகையிலும் பொருந்தியிருக்கக்கூடிய வேறு ஒரு தொழிலுக்கு மட்டும் — சாய, அச்சுத் தொழில்களுக்குமட்டும் விற்பனை வரிச்சலுகையில்லையெனில், சர்க்காரின் பாரபட்சமான இந்தப் பார்வைக்கு என்ன என்று பெயரிட்டு அழைப்பது?

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ, அமைச்சர்களிடமோ இதைப்பற்றி விவாதிக்கச் சென்றால் சாய, அச்சுத் தொழில் "காண்ட்ராக்ட் ஒர்க்" (ஒப்பந்த வேலை) என இக்குடிசைத் தொழிலுக்கு லட்சணம் கூறுகிறார்கள். முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறார்கள்.

தறிக்காரர்கள் கொண்டு வரும் நூலை கூலிக்கு சாயம் துவைத்துக் கொடுப்பது "காண்ட்ராக்ட் ஒர்க்" என சர்க்காருக்குப்பட்டால் டாக்டர்கள் சம்பந்தமாக முதல் பாராவில் விவரித்துள்ள தங்கள் வாதத்தையே — உத்திரவையே நடைமுறையில் வேறு தொழில் செய்வோர் விஷயத்தில் மறுக்கிறார்கள் அல்லது மழுப்புகிறார்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மேலும், சாயம் போட்டு அல்லது துணியை அச்சிட்டு அதற்கென கூலியைப் பெறுவது "காண்ட்ராக்ட்" வேலையாகுமெனில், டாக்டர்கள் தங்கள் நோயாளிகளுக்கு மருந்து கொடுத்துப் பணம் பெறும் ஏற்பாட்டை ஏன் "காண்ட்ராக்ட்" வேலையெனச் சொல்லக்கூடாது? ஆகவே இதுவரை ராஜ்யத்திலுள்ள சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களிடம், அவர்களது கூலிவேலை தொழிலை 'காண்ட்ராக்ட் வேலை' எனச் சொன்னதுபோல மேற்கொண்டும் சொல்லமுடியாத நிலையை சர்க்கார் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்டிருப்பதை இப்போது நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

அதேகாலத்தில், சர்க்கார் நீண்டகாலமாக சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின், விற்பனை வரி விலக்கு சம்பந்தமான கோரிக்கைக்கு இணங்க மறுத்து வந்திருப்பதையும் நாம் எடுத்துக் காட்டுகிறோம். காரணம்; இனி மேற்கொண்டாவது தங்களின் வேண்டாத பிடிவாதத்தை மாற்றிக்கொண்டு சாய, அச்சுத்தொழில்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க முன் வர வேண்டுமென்பதற்காகவேதான் நாம் இவைகளை இங்கு எடுத்துக் காட்டுவது.

அண்மையில் சென்னை ராஜ்யத்திலுள்ள சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்கள் மாகாண மகாநாடு கூட்டி தங்களது ஏகோபித்த அபிலாஷைகள் என்ன என்பதை பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் முன்னிலையில் பிரகடனப்படுத்தியது நேயர்கள்மட்டுமின்றி ராஜ்ய சர்க்காரும் நன்கு அறிவார்கள் அம்மகாநாட்டில் மிகப் பிரதானமானதாகவும், எல்லாப் பிரதிநிதிகளின் உள்ளக் குமுறலைப் பிரதிபலிப்பதாகவும் இருந்தது இதே விற்பனை வரிவிலக்குப் பிரச்னைதான்.

மகாநாட்டுத் தீர்மானங்கள் சர்க்காருக்கு அனுப்பப்பட்டு மாதங்கள் மூன்றாகின்றன. தீர்மானங்களை சர்க்கார் பார்த்துமிருக்கின்றனர். இருந்தும், மார்ச் மாதத்தில் வெளியிட்ட விற்பனை வரி விதிவிலக்கு உத்திரவில்சாய, அச்சுத்தொழில்களை எப்படியோ விடப்பட்டிருக்கிறது. இது தொழிற்சாலையாளர்களிடையே மிகப் பெரிய அதிர்ப்தியையே உண்டாக்யுள்ளது என்பதை சர்க்காரின் கவனத்திற்குக்கொண்டுவருகிறோம்.

எனவே, சர்க்கார் சிறிதும் தாமதமின்றித் தங்களது போக்கை மாற்றிக்கொண்டு ராஜ்ய குடிசை தொழில்களில் ஒன்றாயிருக்கும் சாய, அச்சுத் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நாம் கோருகிறோம்.

(18-ம் பக்கம் பார்க்க)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் அவைகளுக்குப் பஞ்சு ஒதுக்கப்படவேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம் தான், பஞ்சு வியாபாரத்திலும் சரி, நூல் உற்பத்தி, வினியோகம் ஆகியவைகளிலும் சரி அஸ்திவாரத்திலேயே கள்ள மார்க்கெட் ஏற்படமுடியாமல் தடுக்க முடியும். பஞ்சு கொள்முதலுக்கு சர்க்காரிடம் பணம் இல்லையே என்ற வாதத்தைக் கிளப்பலாம். யதார்த்தமாகவே சர்க்கார் கஜானாவில் பணம் இல்லையென்றால் அதற்குத் தக்கபடி கீழ்க்கண்ட முறையில் நம் ஆலோசனையைத் திருத்திக் கொள்ளலாமெனவும் எடுத்துக் காட்டுகிறோம்.

பஞ்சு வியாபாரத்தில் உள்ள ஏ. பி. சி. லைசென்சு முறைகளை ரத்து செய்துவிட்டு ஒரே லைசென்சு முறையைக்கொண்டு வந்து அவர்கள் மூலமும் பருத்தி கொள்முதல் செய்யலாம். பருத்திக்கு நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலை மட்டும் விவசாயிக்கு எக்காரணம் கொண்டும் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வியாபாரிகளின் கொள்முதலுக்குப் பின் அப் பருத்தி சர்க்காரின் குடோனிலிருந்து வெளியே போகும்போது அவைகளுக்கு ஒரு நியாயமான லாபத்தை நிர்ணயம் செய்து அந்த லாபம் கொள்முதல் செய்யும் சர்க்காரின் வியாபாரிகளுக்குக் கிடைக்கும்படி செய்துவிட்டால் போதும். எனவே இந்த யோசனையையும் பரிசீலிக்க வேண்டுமென்று நாம் கோருகிறோம்.

இவைகளை நிறைவேற்றிவைக்கவும், வெற்றிகாணவும் விவசாயிகள், அந்தஸ்தலவியாபாரிகள், மற்ற இதர பொதுஜன ஸ்தாபனங்கள் ஆகியோர் மத்தியிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அப்பொது மக்கள் கமிட்டி முன் இப்பொறுப்புகளை ஒப்படைத்து எவ்வித ஒழுங்கீனங்களும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவும். அவ்வகையில் பொதுமக்களை நல்ல திறமையான நிர்வாகிகளாக பயிற்றுவிக்கவும் முடியுமென்று நாம் எடுத்துக் காட்டுகிறோம்.

நூல் வினியோகமும், துணி விற்பனையும்

நூல் வினியோகத்தில் பலவித ஊழல்கள் தலை விரித்தாடுகின்றன. சிலருக்கு "கன்சியூமர் கோட்டா" என்ற பெயரில் சலுகை காட்டப்பட்டு வருகிறது. மேலும், இன்று நடைமுறையில் உள்ள பரீட்சார்த்த-உத்திரவாத மற்ற பங்கீட்டால் பல ஒழுங்கீனங்கள் நடைபெற்று வருகின்றன. ஜில்லாக்களுக்கு நிர்ணயிக்கப்படும் கோட்டாக்கள் முறையாக வந்து சேருவதில்லை.

இதற்கு ஒரே நிவாரணம்; பொதுஜனக் கமிட்டிகள் அமைத்து அதன் மூலம் உண்மையான தறிக்கணக்கு எடுத்து, தறிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஜில்லாவாரியாக நூல் கோட்டாவைத் திருத்தி அமைத்தது கட்டாய நூல் பங்கீட்டு முறையை அமுலுக்குக் கொண்டு வந்தாலே போதுமானது. கன்சியூமர் கோட்டா என்ற பாரபட்சம் காட்டும் ஏற்பாட்டிற்கும் அத்தோடு சேர்த்து முடிவு கட்டிவிட வேண்டும்.

தவிர, மில்வாசல் விலைக்கும் அந்த நூல் தறிகாரர்களது கையில் வந்துசேரும்போது கூடிவிடுகிற சில்லரை விலைக்கும் மிகப் பெரிய இடைவெளி இருந்து வருகிறது. மில்வாசல் விலையை விட நூல் கட்டு ஒன்றுக்கு சில்லரைவிலைரூபாய்இரண்டிலிருந்து மூன்றுவரை கூடி விடுகிறது.

(தொடரும்.)

சென்னிமலை நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை P. O.

—:o:—

எங்களிடம் 20 செ. முதல் 30 செ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த 5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L.
தலைவர்.

ஏஜனடுகள் தேவை

கடிதம்.

நெல்லை ஜில்லா நெசவாளருக்கு நிவாரணம் தேவை.

அன்புள்ள ஐயா,

திருநெல்வேலி ஜில்லாவில் வாழுகின்ற கைத்தறி நெசவாளர்களின் நூல் நெருக்கடி, வேலை இல்லாக் கஷ்டம், உணவுப் பஞ்சம் ஆகியவைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

நெசவாளருக்கு மாதம் ஒன்றுக்கு பங்கீட்டின் மூலம் கிடைக்கும் நூல் ஒரு வார வேலைக்குக்கூடப் போதவில்லை. கஷ்ட ஜீவனத்தையே இன்று அனுபவிக்கிறார்கள். நூல் பஞ்சத்தால் இந்த ஜில்லாவைவிட்டு வேலைதேடி அகதிகளாக வெளியேறிச் சென்றவர்களும், தேயிலைத் தோட்டங்களுக்கும், ரப்பர் தோட்டங்களுக்கும் சென்றுள்ள ஏழை எளிய பாட்டாளி மக்களும் பலர் இன்னும் தங்கள் சொந்த ஊர்கட்கு வந்து சேரவில்லை. எனவே, தற்கால சர்க்காரும் சரி, வருங்கால சர்க்காரும் சரி ஏழை எளிய கைத்தறி நெசவுத் தொழிலாள மக்கள் நிவாரணத்திற்கான ஏற்பாடுகளில் மிகவும் பொருப்பாகக் கவனம் செலுத்தி நாட்டில் அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை உண்டாக்கித் தருமாறு கேட்டுக்கொண்டு உடனடியாக எங்கள் ஜில்லாவில் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் நிவாரணங்கள் அளிக்க ராஜய சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கனம்,

S. M. திருவுடையான்,

28—2—25
சங்கரன் கோவில்.

அறிக்கை.

ராஜ்யத்திலுள்ள சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் குறைகள் தீர்க்கப்படவும், தேவையான வசதிகளைப் பெறவும், தொழிலின் ஸ்திரமான எதிர்கால வளர்ச்சிக்குப் பாடுபடவும் எல்லா சாய, அச்சுத் தொழிச்சாலையாளர் சங்கங்களும், தனிப்பட்ட தொழிற்சாலையாளர்களும்

மதராஸ் ஸ்டேட் டெக்ஸ்டைல் டையர்ஸ் & பிரிண்டர்ஸ் அசோஸியேஷனில்

இன்றே அங்கத்தினராகச் சேருங்கள்.

சந்தா விபரம்.

சங்கங்களுக்கு	தனி நபர் மெம்பர்களுக்கு
ஆண்டு சந்தா ரூ. 50—0—0.	ஆண்டு சந்தா ரூ. 15—0—0.
பிரவேசக் கட்டணம் ரூ. 10—0—0.	பிரவேசக் கட்டணம் ரூ. 5—0—0.

மற்ற விவரங்களுக்கு தொடர்பேற்படுத்திக் கொள்ளவும்.

காரியதரிசி, மதராஸ் ஸ்டேட் டெக்ஸ்டைல் டையர்ஸ் & பிரிண்டர்ஸ் அசோஸியேஷன்,

85/16, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் R. S.

உத்திரவாதமான கெட்டிச்சாயம் தோய்ப்பவர்கள்

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கத்தாரால் அங்கீகாரம் பெற்றவர்கள்

வரதராஜ் & கோ

சாயத்தொழிற்சாலை

மீன்கரைரோடு, பொள்ளாச்சி.

காலண்டர்கள் வரப்பெற்றோம்.

---

1. சாரி & ராம் டைஸ் & கெமிகல்ஸ்
ஸ்டாக்கிஸ்ட்:- S. வாசன் & Co.
ரங்கே கவுண்டர் வீதி, கோவை.

2. அனிலைன் டைஸ் & கெமிக்கல் கம்பெனி
ஸ்டாக்கிஸ்ட்:—
ஈஸ்வரன் கோவில்தெரு, ஈரோடு

3. சிபா டைஸ் லிமிடெட்
ஸ்டாக்கிஸ்ட்:—R. சுப்பராஜ்
குமரன் வீதி, திருப்பூர்.
&
சுக்ரவாரப்பேட்டை, கோவை.

4. சேண்டோஸ் புராடக்ட்ஸ் லி-ட், டைஸ் & கெமிகல்ஸ்
ஸ்டாக்கிஸ்ட்:—
V. R. பெருமாள் செட்டி & கோ.,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்
&
குமரன் வீதி, திருப்பூர்.

5. யூனியன் காப்பி சப்ளை கம்பெனி,
"மணீஸ் காப்பி"
சுக்ரவாரப்பேட்டை, கோவை.

கூட்டுறவு நெசவாளியின் போனஸ் தொகை உயர்த்தப்படவேண்டும்.

அறிக்கையாளர் கிளப்பியுள்ள கூட்டுறவு நெசவாளர்களின் போனஸ் விகிதம் உயர்த்தப்பட வேண்டுமென்கிற அபிப்ராயத்தை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். ஆண்டு முழுவதும் பாடுபட்ட நெசவாளிக்கு அதிகமாகப் போனஸ் தொகை கிடைக்க வழி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரா விட்டாலும், அவர்கள் பாடுபட்டு லாபம் தேடி பல்வேறு இனங்களின் கீழ் நிதியாகச் சேர்த்து வைத்திருந்தால் அதை சர்க்காரின் கடன் பத்திரங்கள் வாங்கச் சொல்லி மட்டும் கேட்டுக் கொள்ளத் தவறமாட்டார்கள். கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு சர்க்கார் கடன் கொடுத்து ஆதரிப்பதுபோய், சர்க்காருக்கு கூட்டுறவு நெசவாளர்கள் கடன் கொடுக்கவேண்டுமாம்! இது தவிர, இன்னும் பல்வேறுசெலவுகளுக்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பணம் விரயமாக்கப்படுகிறது. நெசவாளியின் போனஸ் மட்டும் 25%க்குமேல் போகக்கூடாதென்று சொல்லப்படுவதை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. இப்பிரச்னை மாகாண ரீதியானது. எனவே, மதராஸ் ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க மகா சபைக்கூட்டம் நடக்கும்போது, போனஸ் பிரச்னையை உயர்த்துவதற்கான பைலாத் திருத்தங்கள் செய்து, சர்க்காரின் அங்கீகாரம்பெற ஒன்றுபட்டு எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் முயற்சிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். — ஆசிரியர்.

இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு மாதம் தறி ஒன்றுக்கு 5 ராத்தல் முதல் 10 ராத்தல் வரை, சென்னை மாகாண கூட்டுறவு சங்கத்தாரால் நூல் வினியோகிக்கப்பட்டுவருகிறது. இந்த நூலை வாங்கிக்கொண்டு சங்க மெம்பர்களுக்கு 50 நாட்களுக்கு ½ பாவு கொடுக்கிறார்கள் (அதாவது 20 நெ. நூல் 56 கெஜம், களி சுமார் 27) களி ஒன்றுக்கு கூலி ஒரு ரூபாய் கொடுக்கப்படுகிறது. ½ பாவுக்குறிய கூலிரூபாய் 27 ஆகிறது. இதில் நூல் இணைத்தல், பாவு வீசுதல், வீதியில் பாவை விட்டுப் பசை போடுதல், ரோல் சுத்துதல், பாவை இணைத்தல் ஆகிய செலவினங்களுக்கு ரூ. 6—4—0 போக மீதமுள்ள 20—12—0 ரூபாயைக்கொண்டுதான் ஒரு குடும்பம் 50 நாட்களைக் கடத்த வேண்டும். இது வாழ்க்கைக்குப்போதுமான கூலிதானா? ஒரு குடும்பம் வாழமுடியுமா? யோசித்துப் பாருங்கள்.

கூலியை உயர்த்த வேண்டும் என்று கருதினாலும் தற்போது உள்ள நிலையில் சாத்தியப்படுவதில்லை. மார்க்கெட்டில் சரியான லாபத்தில் சரக்குகள் விற்பனை ஆவதில்லை. நல்ல லாபத்தில் சரக்குகள் விற்பனை செய்துகொண்டு இருக்கும்போதுகூட மெம்பர்களுக்குக் கூலி உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று சங்க நிர்வாகிகள் கருதினாலும் கூட்டுறவு டிபார்ட்மெண்டார், ஒரு களிக்கு கொடுக்கவேண்டிய கூலியின் உச்ச அளவு இன்னதுதான் என்றும், அதற்குமேல் கூலி கொடுக்கக்கூடாது என்றும் கட்டுப்படுத்துவதோடு அதிகலாபம் இருக்குமானால் மெம்பர்களுக்கு லாபப் பிரிவினையின்போது கூலியின் மீது போனசாக அதிகம் கொடுக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.

அதன்படி லாபப்பிரிவினையின் போது அதிக ரூபாய் போனஸ் கிடைக்கும் என்று மெம்பர்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பார்கள். ஆனால் லாபப்பிரிவினைக் காலத்தில் நிகரலாபத்திலிருந்து 25 சதவிகிதத்திற்கு அதிகம் இல்லாமல் போனஸ் கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. அதன்பிரகாரமே லாபப் பிரிவினை செய்யவேண்டும் என்று கூட்டுறவு டிபார்ட்மெண்டார் தெரிவிப்பதால்வேலைசெய்தமெம்பர்கள் அதிக லாபம் கிடைத்தால் நமக்குறிய போனஸ் அதிகம் கொடுப்பார்கள் என்று எண்ணி இருப்பவர்களின் நிலை ஏமாற்றம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆகவே, கூட்டுறவு நெசவாளர்களுக்கு அதிக நூல் கொடுப்பதுடன் உற்பத்திசெய்த சரக்குகளை வெளிநாடுகளுக்கு கொண்டு போய் விற்பனை செய்வதற்கும் தகுதியான சங்கங்களுக்கு லைசென்ஸ் கொடுத்தும், சங்கத்தில் கிடைக்கும் நிகர லாபத்தில் இருந்து 50 சதவிகித போனசாக லாபப் பிரிவினை செய்வதற்குறிய சட்டங்களை சர்க்கார் செய்து நெசவாளர் கூட்டுறவு இயக்கங்களை மென்மேலும் வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

க. சிவராமன்,
தலைவர்,
A. 1364, புளியம்பட்டி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம்,
அருப்புக்கோட்டை.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுள்ள ஜவுளி மார்க்கெட் நிலவரத்தில் கைத்தறி ஜவுளி அடைந்துள்ள கதி சர்க்காருக்குத் தெரியாத ரகசியமல்ல. கைத்தறி ஜவுளி மார்க்கெட்டின் ஏற்ற இறக்கத்தில் சாய, அச்சுத் தொழில்களும் பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது. சாய, அச்சுத்தொழில் இன்று ஒரே ஸ்தம்பிப்பில் போய் முடிந்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க சர்க்கார் முன்வரவில்லையெனில் அத்தொழிலே நசித்துவிடுமென நாம் எச்சரிக்கிறோம். ●

நூல் பஞ்சம் விரைவில் தீரும்!

ஸ்திரமான வெளிநாட்டு மார்க்கெட்டுகள் கைத்தறி ஜவுளிக்குத் தேவை.

ஈரோடு வட்டார நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மகாநாட்டில் திரு. சோமப்பாவின் அறிவிப்பு.

ஈரோடு வட்டாரத்தைச் சேர்ந்த நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மகாநாடு 21—2—52-ந் தேதியன்று ஈரோடு கூட்டுறவு பாங்கிக் கட்டடத்தில் நடைபெற்றது.

மகாநாட்டிற்கு அகில இந்திய கைத்தறி போர்டு மெம்பரும், சென்னை ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவருமான திரு. எம். சோமப்பா அவர்கள் தலைமை வகித்தார்.

சென்னை ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உபதலைவர் திரு. எம். பி. நாச்சிமுத்த முதலியார் பி.ஏ. பி.எல்., மேற்படி சங்கத்தின் பொக்கிஷதாரர் குடியாத்தம் திரு. ஏ. ஜே. அருணாசல முதலியார் எம். எல். ஏ., மாகாண சங்க டைரக்டர் திருச்செங்கோடு திரு. கே. ஏ. காசி விஸ்வநாத முதலியார், கோவை திரு. ஆர் ராமகிருஷ்ண நாயுடு எம். எல். சி., ஈரோடு திரு. எம். ஏ. ஈஸ்வரன் எம். எல். ஏ., கொடுமுடி தொகுதி சோஷியலிஸ்ட் எம், எல். ஏ., கே. ஆர், நல்லசிவம் முதலியோரும், கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் ஸ்பெஷல் டிப்டி ரிஜிஸ்திரார் திரு. பூபாலராயன், ரீஜனல் மார்க்கெட்டிங் ஆபீசர் திரு. திருநாவுக்கரசு மற்றும் பலரும், ஏராளமான பிரதிநிதிகளும் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில், கூட்டுறவு இயக்கத்தின் முதுபெரும் தலைவர் திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் மாணம் குறித்துத் துக்கம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை திரு. எம். பி. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் பிரரேபித்தார். அனைவரும் இரண்டு நிமிஷம் எழுந்து நின்று இறந்துபட்ட தலைவருக்குத் தங்களின் மரியாதையைத் தெரிவித்துத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும், முனிசிபல் கவுன்சிலருமான திரு. எம். ஜெகநாதமுதலியார் மகாநாட்டுத் தலைவர் திரு. சோமப்பா அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார்.

தலைவர், திரு. சோமப்பா அவர்கள் பேசும்போது, சர்க்கார் எடுத்துக்கொண்ட சில நடவடிக்கைகளால் செயற்கையான நூல் பஞ்சம் ஏற்பட்டு கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படவேண்டி நேரிட்டதென்றும், நாட்டுப் பிரிவினையால் பாகிஸ்தான் பஞ்சு கிடைக்காமல் போய்விட்டதென்றும், கொரியா யுத்தத்தால் எகிப்து பஞ்சு நமக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கவில்லையென்றும், இனி அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு-ஈரோடு.

பஞ்சு தாராளமாகக் கிடைக்குமாதலால் இன்னும் சில மாதங்களில் நூல் கட்டுப்பாட்டு நிலைமையில் மாறுதல் ஏற்படுமென்றும் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், அதிக நூல் சப்ளை, உற்பத்திப்பெருக்கு, ஸ்திரமான வெளிமார்க்கெட்டுகள் இவைகள் தான் கூட்டுறவு சங்கங்களின் அபிவிருத்திக்குத் தேவையென்றும், தற்சமயம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மாதம் 7000 பேல் நூல் தேவையிருக்கிறதென்றும், இந்தத் தேவையை அடையக் குறைந்தது ஆறு கூட்டுறவு நூல் மில்களாவது ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்பொழுது தான் குறைந்த விலையில் நூல் சப்ளை இருந்து வருமென்றும், கைத்தறிகளை விட அதிகமாகத் துணி உற்பத்தி செய்ய பெடல் தறிகள் கூடிய சீக்கிரம் புகுத்தப்படுமென்றும், அதற்கு இந்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் மான்யமும், கடனும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறதென்றும், இப்பொழுது நல்லநிலையில் வேலை செய்துகொண்டிருக்கும் சில மில்களே விலைக்குக் கிடைக்கும்போலிருக்கிறதென்றும், அப்படி விலைக்குவரும் நூல்மில்களைப் பார்வையிட்டு வாங்குவதுபற்றி யோசித்து வருவதாகவும் கூறினார்.

தறிகளின் எண்ணிக்கை நான்கு லட்சத்திலிருந்து 8 லட்சமாக உயர்ந்திருப்பது உண்மைதான் என்றும், ஏனெனில் பழைய காலத்து கைத்தறிகளில் பழக்கப்பட்டவர்கள்தான் நெய்யமுடியுமே தவிர வேறு புதியவர்கள்—பழக்கமில்லாதவர்கள் நெய்யமுடிதென்றும் ஆகவே போலித்தறிகள் இருக்க நியாயமில்லையென்றும் கூறினார்.

கடைசியாக மற்றும் பலர் பேசியபின் கவுண்டச்சிபாளையம் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் முதலியார் அவர்கள் நன்றி கூற மகாநாடு இனிது முடிந்தது. ●

முருகனும், மரகதமும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள்தான். அவர்களின் காதலை வளர்க்க உப்பரிகையில்லை, அந்தப் புறமுமில்லை. அதற்கேற்றாற் போலவே அவர்களின் சந்திப்பும் கனவுலகில் சஞ்சரிக்கவில்லை. யதார்த்த உலகிலே லட்சிய முழக்கமிடுகின்றன.

பலி பீடத்தில்!

ஈ. கு. விவேகானந்தன்.

(தறி நெய்யும் குடும்பம். ஓட்டைக் குடிசை. என்றாலும் ஓய்யார வாழ்விற்கு வித்தான காதல் வளர்ந்திருந்தது.)

முருகன்:- வீட்டில் யாரும் இல்லையா மரகதம்?

மரகதம்:- அம்மா கோயிலுக்குப் போயிருக்கிறாங்க. அப்பா நூல் வாங்கி வரப்போயிருக்கிறார்.

முரு:- நூல் என்ன 'பி. எம்.' லேதானே?

மரா:- பின்னே என்ன கார்டுக்கா கட்டுக்கட்டா கொடுக்கிறாங்க!

முரு:- மாமாவும் அத்தையும் இல்லாத நேரம் பார்த்து நான் இங்கே வந்தது...........

மரா:- அதுவும் ஒரு பி. எம். தான்! (இருவரும் சிரிக்கிறார்கள்)

முரு;- கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாலேயே ரொம்ப புத்திசாலியா இருக்கிறாயே!

மரா:- (வெட்கத்துடன்) போங்க மாமா! உங்களைக் கல்யாணம் செய்துகொள்ளக்காத்திருக்கும் நான் அசடாகயிருக்கணுமா?

முரு:- மரகதம்! உன்னை மணப்பதற்கு நான் எவ்வளவு ஆவலாய் இருக்கிறேன் தெரியுமா? உன் மாமன் மகனாகிய நான் உன்னை மணக்க மட்டற்ற மகிழ்ச்சி யடைந்திருக்கிறேன். என்னை மணக்கப் பல கன்னிப்பெண்கள் காத்திருக்கிறார்கள். எழில் மிக்க பெண்கள் பலர் என்னை எதிர் பார்கிறார்கள். பல அழகிகள் ஆவலாயிருக்கிறார்கள். அவ்வளவுபேரையும் நான் புறக்கணித்து விட்டு உன்னையே என் இதயக்கமலத்தில் வைத்து பூஜிக்கக் காரணம் என்ன தெரியுமா?

மரா:- எனக்குத் தெரியாது. அந்த நீளமான காரணங்களையும் நீங்களே சொல்லிவிடுங்கள். காது குளிரக் கேட்கிறேன்!

முரு:- காவியத்திலே காணாத உன் கட்டழகு! ஏட்டிலே எவரும் தீட்டாத உன் எழில்! சுவடிகளிலே தென்படாத உன் சுந்தர வடிவு! ஓவியத்தில் காணப்படாத உன் ஓய்யாரம்! சிற்பத்தில் இல்லாத உன் சிருங்காரம்! சித்திரத்தில் இல்லாத உன் சிறப்பு! இவைகளே நான் உன்மீது........!

மரா:- பேஷ்! பேஷ்! வர்ணிப்பதில் வால்மீகியையும் மீறுகிறீர்களே!

முரு.- அப்படியானால் நான் சொல்வதெல்லாம் என்ன பொய்யா?

மரா:- அது எனக்குத் தெரியாது. அது போகட்டும்; கையிலே என்ன அது?

முரு:- "கைத்தறி" பத்திரிகை!

மரா:- ஓ "கைத்தறி" யா! ஏன் மாமா அது என்னமோ கம்யூனிஸ்டுப் பத்திரிகையாமே?

முரு:- பணக்காரர்களின் பருந்துப் பார்வைப் பட்டியல் அப்படிச் சொல்லுகிறது. போடி போ. கம்யூனிஸமும் இல்லை ஆட்டுக் குட்டியும் இல்லை. கஞ்சிஸிஸப் பத்திரிகை என்று வேண்டுமானால் சொல்லு.

மரா:- ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

முரு:- உன்னையும் என்னையும் ஆதரிக்கிற அந்தப் பத்திரிகை வேறு என்னவாக இருக்கமுடியும்? பாரேன் அதன் தோற்றத்தை!

மரா:- அசல் குசேலர் மாதிரி தோற்றமளிக்கிறது. அது குபேரன் மாதிரி கொழுப்பதற்கு என்ன செய்யணும்?

முரு:- கொழுத்த மில்காரர்களின் புன்சிரிப்பிற்கு அது பாத்திரமாகணும்! அல்லது நமது ஆதரவு இன்னும் வலுக்க வேண்டும்!

மரா:- நமது காதல் பேச்சிலிருந்து வெளியுலகத்திற்கு வந்துவிட்டோமே!

முரு:- ஆம்! நாம் வெறும் வெறிகொண்ட காதல் பிராணிகளாக வாழக்கூடாது. வெளியுலகை வெறுக்கக் கூடாது. நமது பார்வையைச்

சற்று திருப்பவேண்டும். சொல்லுகிறேன்; இன்று நாடடியிலே பிச்சை என்று ஏந்தி நிற்கும் கைகள் பல! ஆனால் ஏழைகளிடமிருந்து பிடுங்கி ஏப்பமிடும் கைகள் சில! குசேல வாழ்வையே தனது சாபத்தீடான வாழ்வு என்று சகித்து வாழ்ந்து வந்த தறிக்காரன் இன்று அரசாங்கத்தின் வினோத சட்டங்களால் கசாப்புக் கடைக் கொத்துக்கறியாகக் கொத்தப்படுகிறான். அவனது வளமையான வாழ்வு வரண்டுவிட்டது. அவனது செழிப்பான வாழ்வு செத்துவிட்டது. அவனது ஒய்யார வாழ்வு ஓய்ந்துவிட்டது. அவனது தாம்பத்திய வாழ்வு தரித்திரமாகிவிட்டது. இதைத்தான் "கைத்தறி" பிரதிபலிக்கிறது.

மர:- இவைகளுக்கெல்லாம் காரணங்கள் என்ன மாமா?

முரு:- சொல்லுகிறேன்; இன்னும்கேள். பணக்காரர்களின் பலிபீடத்திலே பல ஆயிரக்கணக்கான ஏழைகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஏழைகளின் விழிப்பு பணக்காரர்களுக்கு தங்கள் கையில் விலங்கு பூட்டப்படுவதாகக் கருதுகின்றனர். இன்றைய பணக்காரர்களின் குதூகலமும் புளகாங்கிதமும் எப்படித் தெரியுமா? பல ஏழைகளைக் குழி தோண்டிப் புதைத்ததால் ஏற்பட்டதாகும். அவர்களின் மகிழ்ச்சி பல ஏழைகளை மண்ணோடு மண்ணாய் மறைத்ததால் ஏற்பட்டதாகும்.

மர:- முடிவாக உங்களுடைய பதில் இன்று நாட்டில் பணக்கார ஜாதி, ஏழை ஜாதி என்று இரண்டு இருப்பதாகக் கூறுகிறீர்கள்.

முரு:- ஆம்!

மர:- இந்த இரண்டு முரண்பாட்டிற்கும் இடையே சதா போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது என்றும் சொல்லுகிறீர்கள்?

முரு:- அதில் சந்தேகம் வேறு? இன்று நம் தேசத்தில் பசியால் மெலிந்தவர்களின் அழுகுரல் ஒரு பக்கம்! பஞ்சின் மெல்லியர்களை அணையும் கும்பல் ஒருபக்கம்! ஒருபக்கம் பசித்தவர்களின் தேம்பல்! மற்றொரு பக்கம் பணக்காரப் பாவையர்களின் தெம்மாங்கு! ஒரு பக்கம் கடும் உழைப்பாளியின் கரங்கள் வேலை செய்யும் ஆயுதத்தை இறுக்கிப்பிடிக்கிறது! மற்றொருபக்கம் கொழுத்த பணக்காரக் குப்பலின் கரங்கள் குமரிகளை இறுக்கித் தழுவுகிறது! ஏக்கமும் கலக்கமும்கொண்ட கண்கள் ஏழைகளுடையதாயிருக்க, எரிக்கும் காமக் கண்கள் பணக்காரர்களுடையதாயிருக்கிறது.

மர:- போதும் போதும்! பணக்காரர்களைத் திட்டுவதற்கென்றே புத்தகம் ஏதாவது எழுதப் போகிறீர்களா என்ன?

முரு:- கிடையாது. புத்தக விற்பனையை புதையலாக நான் கருதவில்லை. உனக்கு உலகம் தெரியாது. பல பணக்காரர்களின் ஒய்யாரப் பார்வையிலே பல ஒப்பந்தபாரங்கள் பூர்த்தி செய்யப்படுவது உனக்குத் தெரியுமா? தறிக்காரன் உயர்வு — தரணியின் உயர்வு! இதை அனைவரும் உணருகிற வரையில் நான் சும்மா இருக்கப்போவதில்லை, "கைத்தறி"யும் ஓயாது.

மர:- அப்படியானால் எடுத்ததெற்கெல்லாம் பணக்காரர்கள் என்றால் பணக்காரர்களின் சிரிப்புக்கூட பல ஏழைகளை சிதைப்பதால் ஏற்படுகிறது என்றல்லவா நீங்கள் குற்றம் சாட்டுவீர்கள்?

இன்றே கேட்போம்!

—x—

எங்கள் பெண்கள் கைகள் காய்க்க
இழுத்தறுத்த நெல்லை,
தங்கத் தட்டில் தனவந்தர்கள்
தயிர் நெய்யோடே யுண்ண,
மங்கு மொளியில், இருட்டறையில்,
மகன் மகளோடு நாங்கள்
பொங்க ஏதும் அரிசியின்றி
புலம்பி நிற்பது மேனோ?

மெல்லிழையார் தங்கள் கையால்
மீட்டி விடுமிழையால்,
மெல்லிய பல் துணிகள் நெய்தார்;
மிகமிகவே உழைத்தார்.
கல்லாலிழைத்த பாவைகட்கும்
துணியுடுத்தும் இங்கே,
இல்லை; இல்லை; துணியுமில்லை;
இந்தப் பெண்கட்கில்லை.

உழவர் சேர்ந்து உழுது நட்டார்;
பயிரும் வளர்த்தார்; உண்மை.
கிழவர் எங்கள் வீட்டில் சும்மா
இருக்கவில்லை; உழைப்பார்.
குழந்தை கூடப் புல்லை வெட்டிக்
கட்டிக் கன்றை வளர்க்கும்.
இழந்தோம்; எமதுரிமை இழந்தோம்;
எழுந்தோம்; இன்றே கேட்போம்.

—க. பரமசிவன், சென்னை.

முரு:- ஆம். அவர்கள் புன்னகைகூட புதையல் போன்றதுதான். இன்னொன்று சொல்லுகிறேன் கேள். குடிசை மண் வீட்டிலே கணவனுக்காக கண்ணீர்சிந்தும் பத்தினிப்பெண் வாடுகிறாள். குபேர மாளிகையிலே காமக் காதலுக்காக கண்ணீர் சிந்தும் கன்னிகை வளமை யடைகிறாள். நாகரீக நகரங்களிலே உன்போன்ற பருவப்பாவையர்களின் உடல் வாடகைக்கு விடப்படுகிறது. ஒருவளை அணையவிரும்பும் பலர். பலரை அணைய விரும்பும் ஒருவள். வயிற்றுப்பசிக்காக வழுக்கி விழும் பெண்களின் மார் மீது காசு வீசியெறியப் படுகிறது!

மர:- அதுபோகட்டும் மாமா! இனி நம் சொந்த விஷயத்தைக் கவனிப்போம்.

முரு:- நம் கல்யாணத்தைப் பற்றித்தானே சொல்லுகிறாய்?

மர:- ஆமாம். நம் காதல் வெற்றி பெறுவது....

முரு:- (திடுக்கிட்டு) அதில் சந்தேகம் வேறா?

மர:- நமது காதல் வெற்றியில் போராட்டமும், கண்ணீரும் ஏற்படும்போல் தெரிகிறது.

முரு:- ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

மர:- யாரோ தெரியவில்லை. மதராஸ் முதலியாராம். பெண் பார்க்க மத்தியானம் வந்திருந்தார். என் அப்பாவிடம் நான் ரொம்பப் பிடித்திருப்பதாகக் கூறினார். அவர் கோரிக்கைக்கு அப்பா இணங்கவில்லை. அதற்கு மதராஸ்காரர் வேண்டுமானால் ஐந்து ஏக்கா விளைச்சல் நிலம் சீதனமாக அப்பா பேருக்கு எழுதித் தருவதாக சொன்ன உடனே அப்பா பல்டி அடித்துவிட்டார்.

முரு:- அடடே! அப்படியா சங்கதி! இந்தப் பாழும் பொல்லாத ஐந்து ஏக்கர் வெகு வேலை செய்யும்போலிருக்கிறதே!

மர:- இதனால் நமது காதல்...........

முரு:- முடியாது. ஒருக்காலும் முடியாது. பணக்கார பலிபீடத்தில் நம் காதலைப்பலிபிடவிட மாட்டேன். இதற்காக குந்திப் புலம்பககூடாது. குதித்துப் புரட்சி செய்யவேண்டும். என்ன சொல்லுகிறாய் நீ? (அவள் கரங்களைபற்றுகிறான்)

மர:- (சிரித்து) அப்படியே தூர இருங்கள். என்னைத் தொடவேண்டாம். சும்மா ஒரு பொய்யைப் புனைந்து பார்த்தேன். ஆள் அப்படியே அசல் கதாநாயகனாகி விட்டீர்களே!

முரு:- அடிக் கள்ளீ!

மர:- முருகன் என்ற உங்களுக்கு நான் கள்ளியா?

முரு:- இல்லை இல்லை. வள்ளீ! ○

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

கடைத்தெரு, கோயமுத்தூர்.

உபரி தானியத்தைக் கட்டுப்பாடு விலையில் ஜனங்களுக்கு விற்க அனுமதிக்கவும்.

கைத்தறி தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களை ராஜ்ய மேல்சபை, ராஜாங்க சபைகளுக்கு நியமிக்கவும்.

கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க நிர்வாகக் கமிட்டியின் தீர்மானங்கள்.

கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் அதன் தலைவர் துளசிராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் 23—2—52-ந் தேதியன்று நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

● நெசவாளர்கள் குறைகளைத் தீர்க்க அவ்வப்பொழுது ஏற்படும் கஷ்டங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மந்திரிகளுக்கும் எடுத்துரைத்து வாதாடும்படி கோவை ஜில்லாவிலுள்ள ராஜ்ய, மத்திய சட்டசபை அங்கத்தினர்களை இக் கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

● நம் குறைகள் மாகாணம் அல்லது இந்தியா முழுவதும் தெரியவும் தொழில் வளர்ச்சிக்காக பாடுபடவும் நெசவுத் தொழில் சம்பந்தப்பட்ட நெசவாளர்கள், கைத்தறித் துணி வியாபாரிகள், சாயப் பட்டரைக்காரர்களைக் கொண்ட ஜில்லா மகாநாட்டைக் கூட்ட மகாசபையாரின் அனுமதியைக் கோருகிறது. கோவை ஜில்லாவிலுள்ள நெசவுத்தொழில் வளர்ச்சியை விரும்பும் அனைவரையும் ஜில்லா மகாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவிக்கும்படி (கோவை ஜில்லாவிலுள்ள சங்கங்களை) இக்கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

● நிலத்தின் பரப்பையும் நீர்பாசனத்தின் வசதிகளையும் அடிப்படையாகக்கொண்டு, குறைந்த பட்ச கொள்முதலை சர்க்கார் செய்துகொண்டது போக உபரியாக உள்ள தானியத்தை சர்க்காரின் சில்லரை நிர்ணய விலைக்கு ஜனங்களுக்கு நேரடியாக விற்க அனுமதித்தால் விவசாயிகள் அதிக லாபம் பெறவும், அதனால் உற்பத்தி பெருகவும் ஏதுவாகும் என்றும், அதே சமயம் வெளி தேசங்களிலிருந்து தானிய இறக்குமதி செய்தால் மார்க்கெட்டில் தாராளமாகக்கிடைக்காது என்ற பயம் நீங்கி நாளை கிடைக்காது என்று அதிக விலை கொடுத்து வாங்குவோரையும், நாளை அதிக விலைக்குவிற்கலாம் என்னும் பதுக்கல்காரர்களையும் லேசில் களைவதுடன், ஜனங்களின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யலாமென்றும், இக்கமிட்டி கருதுகிறது.

எனவே, இந்த அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி ராஜ்ய, மத்திய சர்க்கார்களை வற்புறுத்தி இக் கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

● இந்திய நெசவுத்தொழில் தற்காலத்தில் குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் மிகவும் கேவல தசையில் இருக்கிறது. இந்நிலையில் இந்தியாவில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக உள்ள மிகப் பெரிய குடிசைத் தொழிலான இக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 90 லக்ஷம் நெசவுத் தொழிலாளர்களின் நிலை வெகுவாக சீர்கெட்டு அழிந்துவருகிறது. இந்நிலையைப்போக்கவும், இவர்களின் அன்றாட தேவைகள் பற்றி தெரிவிப்பதற்கும் நெசவுத்தொழிலில் நேரிடையாக தொடர்புள்ள அல்லது ஈடுபட்டுள்ள தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களை கைத்தறி நெசவுத்தொழிலாளர் பிரதிநிதிகளாக ராஜ்ய மேல்சபைக்கும், இந்திய ராஜாங்க சபைக்கும் நியமிக்கவேண்டுமென்றும் ஜனாதிபதி அவர்களையும், சென்னை ராஜ்ய கவர்னர் அவர்களையும் இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது. ●

'டெக்ஸ் மார்க்' வழங்குமாறு கோரிக்கை.

திருப்பூர் சாய & அச்சுத் தொழிற்சாலையாளர் சங்கக் கூட்டம்.

மேற்படி சங்க அங்கத்தினர்களின் பொதுக்கூட்டமொன்று 24—2—52 ஞாயிற்றுக்கிழமையன்று அதன் தலைவர் பி. ஜி. பாலசுப்ரமணியம் தலைமையில் சங்க கட்டடத்தில் நடைபெற்றபோது,

" நூல்-ஜவுளி டெக்ஸ் மார்க் அலாட்மெண்ட் விஷயமாக பிராசஸ் செய்யும் எல்லா மெம்பர்களுக்கும் தனித்தனியாக லைசென்சு வழங்க ஏற்பாடு செய்யும்படி கோவை டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீசரை மீண்டும் சந்தித்துக் கோருவதென்றும்,

" கெமிகல்கள் வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்ட மெம்பர்களுக்கு கெமிகல்கள் தருவித்துக்கொடுப்பதென்றும்,

" சங்கத்தின் 6-வது ஆண்டு பூர்த்தி விழாவைச் சிறப்பாக ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்துவதென்றும்" தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கல்லூரி
மாணவிகள்
விரும்புவது
கோ-ஆப்
டெக்ஸ்
ஜவுளிகளே!

மதராஸ் ராஜ்ய கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு சங்கம் லி-ட்.
எழும்பூர் :: மதராஸ்